விலை ரூபா: 15.00


Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 16 வியாழக்கிழமை (31.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 225




## சட்டவிரோதமாக குடியிருப்பவர்களை அகற்றும் உரிமை அரசாங்கத்திற்குண்டு

### உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித்தெரு கிளனி ஒழுங்கையை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் ரயில் பாதையின் இரு மருங்கிலும் சட்டவிரோதமாக குடியிருப்பதால் அவர்களை எந்நேரத்திலும் அங்கிருந்து அகற்றுவதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு உள்ளதென உயர் நீதிமன்றம் நேற்று சுட்டிக்காட்டியது.

இதற்கு அமைய அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கிளனி ஒழுங்கையைச் சேர்ந்த சில குடியிருப்பாளர்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே உயர் நீதிமன்றம் (12ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் ஆயருடன் அரச உயர்மட்டக் குழு சந்திப்பு

(மன்னார்)

மன்னார் மடுத் திருத்தலத்தில் மடுமாதாவின் திருச் சொரூபத்தை மீண்டும் வைப்பது தொடர்பாகவும் ஆவணித் திருவிழாவை நடத்துவது தொடர்பாகவும் முக்கிய உயர்மட்ட மாநாடு ஒன்று மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இவ் உயர் மட்ட மாநாட்டில் ஆறு முக்கிய அமைச்சர்களும், மன்னார் அரச அதிபர், இராணுவ மற்றும் பொலிஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு பத்து நாட்களுள் பாதுகாப்பு அனுமதி

### யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு இராணுவத்தினரிடம் பெற்றுக் கொள்ளும் பாதுகாப்பு அனுமதியை விண்ணப்பித்து 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளார். அரச ஊழியர்களுக்கு நான்கு நாட்களிலும் அவசர தேவை நிமிர்த்தம் செல்பவர்களுக்கு 48 மணி நேரத்திலும் அவ் அனுமதி வழங்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை துணைத் தூதரகம் முன்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து படுகொலை செய்து வருவதைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது அதன் தேசியச் செயலாளர் டி.ராஜா உள்ளிட்டோர்களை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து படுகொலை செய்து வருவதைக் கண்டித்தும் இதுபோன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திடக் கோரியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நேற்றுக் காலை முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்கு முன்பாக அருகில் இருந்த மியூசிக் அக்கடமி என்ற இடத்திலிருந்து பேரணி புறப்பட்டது. இந்தப் போராட்டத்திற்கு அக் கட்சி (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலுள்ள அனைத்து தொலைபேசிகளும் துண்டிப்பு

(கிளிநொச்சி)

சார்க் மாநாட்டு செய்திகளை சேகரிப்பதற்கு கொழும்பு வந்துள்ள அனைத்துலக ஊடகவியலாளர்கள், போர் நடைபெறும் வன்னிப் பிரதேச செய்திகளை விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்வதை தடைசெய்யும் பொருட்டு, வன்னிப் பகுதிக்கான சகல தொலைபேசி சேவைகளையும் அரசு துண்டித்துள்ளது என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதன் மூலம் வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களிலிருந்து சுமார் ஒரு இலட்சம் மக்களை இடம்பெயரவைத்துள்ள அரச படைகள், அப்பாவி பொதுமக்களை இலக்கு வைத்து தொடர்ந்து எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்போதிலும்,வன்னிப் பிரதேசம் மீதான விமானப்படையின் வான்தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு பொது மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா கட்சி அலுவலகத்தை பயன்படுத்துவதில் அந்த கட்சிக்கும் கட்சியிலிருந்து வெளியேறிய எஸ்.சதாசிவத்துக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறி தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை அளிக்கப்பட்ட அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா (12ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான

கணக்கீடு -I பகுதி (I,II)

பௌதிகவியல் -I

பாட மாதிரி வினாத்தாள்.

### கரும்புலிகளின் முகாம் மீது விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள கரும்புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீது நேற்று காலை 6.35 மணியளவில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இரணைமடுக் குளம் மேற்கே மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்ட கரும் புலிகளின் பயிற்சி முகாம் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கர்க விமானப்படையின் ஜெட் ரக யுத்த விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த விமானத் (12ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டுக்குப் பின்னர் நாட்டில் பூரண அமைதி ஏற்படும்

### அமைச்சர் நிமல் நம்பிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்கள் இருந்தாலும் சார்க் உச்சி மாநாட்டின் பின்னர் அரசாங்கம் நாட்டில் முழுமையான அமைதியை ஏற்படுத்தும் என சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்றுவரும் 15-வது சார்க் உச்சிமாநாட்டின் ஓர் அங்கமாக சார்க் நாடுகளது வெளிவிவகாரச் செயலாளர்களின் மாநாடு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இம்மாநாட்டின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

புலிகளின் ஒருதலைப் பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பையிட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## சுத்திகரிப்புத் தொழிலாளர் நேர்முகப் பரீட்சை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த 30 வயதுக்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளுக்கான சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆட்சேர்ப்பு செயன்முறை நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

அந் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான மாற்றியமைக்கப்பட்ட தனித்தனியாக கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதம் கிடைக்கப் பெற்றவர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## செவிப்புலனற்றோர் நிறுவன ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சீனியர் லேன், கலட்டியிலுள்ள நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன், யாழ்.குரு முதல்வர் வண.செ.பி.நேசகுமார், கைதடி நவீல் பாடசாலை பதில் அதிபர் திருமதி அ.கருணரட்ணம், றூட் போசகர் சட்டத்தரணி வை.த.சிவலிங்கம், நல்லூர் றோட்டரிற் கழகத் தலைவர் கே.சுசேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)

## வழுக்கையாற்றுக்குட்பட்ட குளங்களின் புனரமைப்புத் தொடர்பான கூட்டம்

நியாப்திட்டத்தினூடாக நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் புனரமைக்கப்படவுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட குளங்களுக்கும் ஏனைய குளங்களுக்குமான உறுதிப்படுத்தல் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வழுக்கையாறு பிரதான வாய்க்கால், திக்கிராய்க்குளம், உப்பு வயல்குளம் என்பவற்றிற்கான கூட்டங்கள் எதிர்வரும் மூன்றாம் திகதி காலை 9 மணிக்குத் தொல்புரம் கமநல சேவை நிலையத்திலும் வழுக்கையாறு பிரதான வாய்க்கால், ஆழங்குழாய்க்குளம், முதலியார்குளம், கும்பாக்குளம், வண்ணான் குளம் என்பவற்றிற்கான கூட்டங்கள் சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தில் அன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.

இக் கூட்டங்களில் அரசாங்க அதிபர், நியாப் பிரதித் திட்ட பணிப்பாளர் உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு இவ் வேலைத் திட்டம் தொடர்பான பூரண விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இறுதித் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

குறிப்பிட்ட குளத்துடன் தொடர்புடைய விவசாயிகள் மற்றும் சம்மேளனப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் தவறாது கலந்து பயன் பெறுமாறும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-5)

## பாடசாலை வேலைகளுக்கு சீமெந்து வழங்கல்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பாடசாலை வேலைகள் பகுதியினூடாகக் கட்டட நிர்மாண, திருத்த வேலைகளை மேற்கொள்ளவுள்ள ஒப்பந்தகாரர்களுக்குச் சீமெந்து வழங்க ஏற்பாடாகியுள்ளது.

சீமெந்து தேவைப்படும் ஒப்பந்தகாரர்கள் பாடசாலை வேலைகள் பகுதியினது சிபார்சுடன் மருதனார்மடத்திலுள்ள லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன முகாமையாளருடன் நாளை வெள்ளிக்கிழமையினுள் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை பாடசாலை வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஜி.சிவபாலன் அறிவித்துள்ளார். (ச)

## சுகமஞ்சரி நூல் வெளியீட்டு விழா

சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சின் சுகமஞ்சரி வெளியீட்டு விழா எதிர்வரும் மூன்றாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் உப தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில்,

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக மருத்துவ பீட பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.சிவபாலன், உயர் இரசாயனவியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தினேஷ் ஜெயக்குமார், யாழ்.பல்கலைக்கழக நூலகர் திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி வி.மதுமதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நூலின் ஆய்வுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். முதற்பிரதியை திருமதி சாந்தி சிவஞானசுந்தரம் பெறுவார். (ச)

## சீமெந்துப் பைக்கற்றுக்களுடன் காங்கேசன்துறையில் கப்பல்

(யாழ்ப்பாணம்)

32 ஆயிரம் சீமெந்துப் பைக்கற்றுக்களை ஏற்றிய கப்பல் ஒன்று காங்கேசன்துறைக்கு வந்துள்ளது. இக் கப்பலிலிருந்து சீமெந்துப் பைக்கற்றுக்களை இறக்கும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இவை அரச அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. வீடமைப்புத் திட்டங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான சீமெந்துப் பைக்கற்றுக்கள் அரச அதிபரின் சிபார்சுடன் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை தனியார் வர்த்தக நிலையங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலையில் சீமெந்தை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை அத்தியாவசியப் பொருள்களுடன் வந்த கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்ட நிலையில் குடாநாட்டில் அவற்றுக்கான தட்டுப்பாடு குறைவடைந்து வருவதாகவும் விரைவில் தட்டுப்பாடாகவுள்ள மேலும் சில பொர்ருள்களுடன் கப்பல் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## சிவபூமியில் ஆடி அமாவாசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வழக்கம்பரை சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் விசேட நிகழ்வுகள் நடைபெறும்.

இந் நிகழ்வில் செஞ்சொற்செல்வரில் சொற்பொழிவும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலாயநாதனின் ஏற்பாட்டில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் சிறுவர் நாடகம், ஒயிலாட்டம், குழு இசை என்பனவும் இடம் பெறும். (ச)

## பொலிஸ் பதிவுகளுக்குத் தமிழ் மக்கள் அலையும் அவலத்தைத் தீர்த்து வைக்கவும்

### பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் கோரிக்கை

(கொழும்பு)

முகத்துவாரம் பொலிஸ் நிலையத்தில் பதிவுக்கு மீண்டும் புகைப்படம் கேட்டு தொந்தரவு செய்வதுடன், பதிவுகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு சென்றால் உரிய உத்தியோகத்தர் இல்லையென்று திருப்பி அனுப்புவதாக மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணனிடம் பொதுமக்கள் புகார் செய்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரீட்னவுக்கு பிரதி அமைச் சர் அறிவித்து பொதுவான நடைமுறைகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்து பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையில் பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு கோரியுள்ளார்.

முகத்துவாரம் பொலிஸ் பதிவுகளில் உரிய அதிகாரிகள் அத்தாட்சிப்படுத்திக் கொடுப்பதற்கு மறுப்பு தெரிவித்து வரும் அதேவேளை வெள்ளவத்தை, தெஹிவளை முதல் கிராண்ட்பாஸ் வரையிலான பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் பதிவுகளுக்கு பல நாட்கள் தமிழ் மக்கள் அலைந்து திரிந்து வருவதாக பிரதியமைச்சர் கவலை தெரிவித்தார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையைக் கணக்கில் எடுக்காமல் சோதனைச் சாவடியில் பொலிஸ் பதிவுகளையே இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் கேட்டுத் தடுத்து வைத்திருப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தெஹிவளைப் பகுதியில் பதிவுப் படிவம் தமிழர்களைப் பதிவு செய்யும் படிவம் என்று குறிப்பிடப்பட்டு விநியோகிக்கப்பட்ட படிவங்கள் குறித்துப் பிரதி அமைச்சர் கண்டனம் தெரிவித்ததுடன் முறையற்ற ரீதியில் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்படுவது பிரச்சினைகளுக்கே வழி வகுக்கும என்றும் தெரிவித்தார். (அ-6)

## குச்சவெளியில் மீனவர்களின் 20 வாடிகள் எரிந்து நாசம்

(திருகோணமலை)

திருகோணமலை குச்சவெளிக் கரையோரப் பிரதேசத்தில் அமைந்திருந்த மீனவர்களின் 20 வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தின்போது குடிசையில் தங்கியிருந்த ஒருவர் தீயில் அகப்பட்டுக் கடுமையான காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அத்தோடு மீனவர்களின் வலைகள், படகுகளும் எரிந்துள்ளன. இதனால் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீனவர்களின் சொத்துக்கள் அழிவடைந்துள்ளன.

நீர்கொழும்பிலிருந்து மீன்பிடித் தொழிலுக்காகத் தமிழர்களும் முஸ்லிம்களும் வந்து சலப்பையாற்றுப் பகுதியில் உள்ள கடற்கரையில் வாடிகள் அமைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திருமலை மீனவர்கள் தங்களது மீன்பிடித் தடையை அகற்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கும்படி கேட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (அ-5)

## சகல ஆசிரியைகளுக்கும் இலவச புற்றுநோய் ஆரம்பக்கட்ட பரிசோதனை

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

கர்ப்பப்பை மற்றும் மார்புப் புற்றுநோய் தொடர்பான ஆரம்பக்கட்ட பரிசோதனைகளை சகல ஆசிரியைகளுக்கும் இலவசமாக மேற்கொள்ளும் செயற்திட்டமொன்றை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரான்ஸில் இயங்கிவரும் சர்வதேச புற்றுநோய் பரிசோதனை மத்தியநிலையம் இதற்குத் தேவையான நிதியையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகின்றது. இலங்கையில் தற்போதைக்கு ஆண்டுதோறும் 7 ஆயிரத்து 374 பெண் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படும் அதேவேளை இவர்களில் பெரும்பாலானோர் கர்ப்பப்பை மற்றும் மார்புப் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆண்டுதோறும் 1925 பெண்கள் கர்ப்பப் புற்றுநோயிற்கும் 1846 பெண்கள் மார்ப்புப் புற்றுநோயிற்கும் இலக்காவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோய் தொடர்பான ஆரம்ப கட்டப் பரிசோதனைகள் மூலம் நோயின் ஆரம்ப நிலையை அறிந்து புற்றுநோய்க்கு உள்ளாகும் பெண்களில் 30 வீதமானோரின் உயிர்களை காப்பாற்ற முடியும் என சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. (அ)

## சிறந்த தொழில் முயற்சியாளர்கள் விருது

(கொழும்பு)

கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் 2008காலப் பகுதிக்கான சிறந்த தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்து விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவுகள் மாவட்டம், மாகாணம், தேசிய மட்டத்தில் நடைபெற்று தெரிவுசெய்யப்படுவோருக்கு சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 42 பேர் வரை பல்வேறு துறைகளினூடாகவும் தெரிந்தெடுக்கப்படுவர் என்றும் இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச்சபையின் வடமாகாண காரியாலயம் அறிவித்துள்ளது.

இதற்காக பின்வரும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ உணவுப் பொருள் மற்றும் பானங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழில்கள்

(வெதுப்பகங்கள், இனிப்பு வகைகள், பிஸ்கற் வகைகள், மாவு தூள் தானிய வகைகள் அரைத்துப் பொதி செய்தல், பழப் பானங்கள், ஜாம், கோடியல், பப்படம், மிக்ஸர் மற்றும் உணவுப்பண்டங்கள் போன்றன தயாரித்து விற்பனை செய்யும் தொழில்கள்)

❖ மின்சாரப் பொருள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழில்கள்.

❖ இயந்திரங்கள் மற்றும் பொறிகளும் அதன் பாகங்களும் உதிரிப்பாகங்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழில்கள், இலகு பொறியியல் துறையான வெல்டிங், ரிங்கரிங் வேலை, கடைச்சல், வார்ப்பு, உருக்கி ஒட்டுதல், உலோகங்களை அடிப்படையாகக் தொழில்கள் போன்றவற்றில் ஈடுபடும் தொழில்கள்.

❖ தும்பு மற்றும் ஈர்க்குகளை அடிப்படையாகக் கொண்ட தும்புத்தடி, விளக்குமாறு, கயிறு, தூரிகைகள், கால் துடைப்பம், பன்ன வேலை போன்றவற்றில் ஈடுபடும் தொழில்கள்.

❖ தச்சு வேலை, மரச் செதுக்கு வேலை, மர அரிவு வேலை போன்றவற்றில் ஈடுபடும் தொழில்கள்.

❖ அச்சக வேலைகள், கடதாசியை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், புகைப்படச் சுருள் கழுவுதல், திரை அச்சுப்பதிப்புக்கள் அச்சகங்கள் போன்ற தொழில்கள்.

❖ சவர்காரம் ஊதுபத்தி கற்பூரம், மெழுகுதிரி, எண்ணெய் வகைகள், சுவர்ப்பூச்சுக்கள், கருங்கல் வேலைகள், மட்பாண்ட உற்பத்திகள், நகை வேலைகள் போன்ற தொழில்கள்.

❖ இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கண்ணாடி இழைகளை மூலப்பொருட்களாகக் கொண்ட கைத்தொழில்கள். (ஓ)

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் தேவையும்

ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் அந்த ஆசை தேவைக்குத் தகுந்த மாதிரி இருக்க வேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்துவது மாதிரி ஒரு கதை உண்டு.

தேவேந்திரனுக்கு ஒரு பிரமாண்டமான அரண்மனை கட்டவேண்டும் என்று ஆசை வந்ததாம். உடனே தேவ தச்சரான விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு உத்தரவு போட்டான்.

விஸ்கர்மா தனது உதவியாளர்களையெல்லாம் சேர்த்து கொண்டு ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினார். அதைக் கட்டி முடிக்க ஆயிரம் வருடங்கள் ஆகிவிட்டதாம். தேவேந்திரன் வந்து பார்த்தான். அவனுக்குத் திருப்தி ஏற்பட வில்லை.

''என்னுடைய அந்தஸ்த்துக்கு இது சாதாரணமான கட்டடம்! இதைவிட இன்னும் பெரியதாக கட்டு!'' என்றான். தேவதச்சர் திணறிப்போய்விட்டார். அவரால் அதற்கு மேல் எதுவும் செய்யமுடியவில்லை!

நேராக நாரதரின் காலில் போய்விழுந்தார். ''நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்றார். நாரதர் யோசித்தார். ''சரி கவலைப்படாதே!'' என்றார். நேராக இந்திரனிடம் போனார்.

இந்திரன் நாரதரைப் பார்த்தவுடன், கூட்டிக்கொண்டு போய் அரண்மனையைக் காட்டினான். ''இது மாதிரி அரண்மனையை வேறு எங்காவது பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டான்.

அதற்கு நாரதர் நான் பார்த்ததில்லை! ஆனால் என்னை விட வயதில் மூத்தவர் மகாரிஷிலோமேசர்! அவர் ஒரு வேளை பார்த்திருக்கிறார்ரோ என்னமோ?'' என்றார். உடனே அவரை நினைத்து தியானம் பண்ணினார். அடுத்த கணம் லோமேசர் அங்கே தோன்றினார்.

இடையில் ஒரு சின்னத்துண்டு... கையில் ஒரு கமண்டலம் ..தலையில் ஒரு பாய்அவ்வளவு தான் அவரிடம் இருந்தவை.

''எதற்காக தலையில் இந்தப் பாய்?'' என்று கேட்டான் இந்திரன்.

''என்னைமாதிரிஅற்ப ஆயுள் உள்ள ஒரு ஜீவன் தனியாக வீடு கட்டிக் கொண்டு திண்டாட வேண்டுமா? இந்தப் பாய் தான் எனக்கு நிழல் கொடுக்கிறது!'' என்றார் அவர்.

''உங்களுக்கு அவ்வளவு கொஞ்சஆயுளா?'' என்று ஆச்சியரித்தோடு கேட்டான்இந்திரன்.

''ஆமாம்! என் மார்பில் ஒரு பொற்காசு அளவுக்கு ரோமம் உதிர்ந்து விட்டது! எப்பொழுதுஎன் உடம்பில் உள்ள எல்லா ரோமமும் உதிருமோ அப்பொழுது தான் என் ஆயுள் முடியும்'' என்றார்.

''எப்பொழுது அந்த ரோமங்கள் முழுவதும் உதிரும்?'' என்று கேட்டான் இந்திரன்.

''ஒரு பிரம்மா மறைந்ததும் ஒரு உரோமம் உதிரும்! என் உடம்பிலுள்ள ரோமங்களின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு பிரம்மாக்கள் தோன்றி அவர்கள் ஆயுள் முடியும் போது என் உடம்பில் உள்ள ரோமங்கள் முழுவதும் உதிரும்!'' என்றார்.

''அப்படியானால், ஒரு பிரம்மாவின் ஆயுட்காலம் எவ்வளவு?'' என்று கேட்டான்.

''ஒரு பிரம்மாவுக்கு 100 தேவ வருஷம். ஒவ்வொரு தேவ வருஷத்துக்கும் 365 தேவ நாள். ஒவ்வொரு தேவ நாளிலும் உன்னை மாதிரி 14 இந்திரர்கள் தோன்றி மறைவார்கள்!'' என்று மகரிஷிலோமேசர் சொன்னார்.

இதைக் கேட்டதும் இந்திரன் ஆடிப் போய்விட்டான்.

''அவ்வளவு ஆயுள் உள்ள இவரே அற்ப ஆயுள்எனும் போது நான் என்னுடைய ஆயுளைப் பெரிதாக நினைத்து அரண்மனைகட்ட ஆசைப்பட்டேனே!'' என்று நினைத்து, ''எனக்கு இதுவே போதும்!'' என்று சொல்லிவிட்டான். அதனால் நாம் நமது தேவைக்குத் தகுந்த மாதிரி ஆசைப் படுவது தான் நியாயம்! ஆனால் அப்படியா நடந்து கொள்கிறோம்.

மனிதன் கடவுளையே ஏமாற்றிகாசு வாங்குவதற்கல்வா ஆசைப்படுகிறான்! ஒருவன்கடவுளை நினைத்து தவமிருந்தான். கடவுள் நேரில் காட்சிகொடுத்தார் ''தேவ லோகத்தில் ரூபாய்க்கு என்ன மதிப்பு?'' என்று கேட்டான்.

''அங்கு ஒரு ரூபாய் உங்களுடைய பணத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு சமம். அதேமாதிரி எங்களுக்கு ஒரு நாள் உங்களுக்கு ஒரு கோடி வருஷத்துக்கு சமம்!'' என்றார் கடவுள். ''அப்படியென்றால் எனக்குஉங்கள் கணக்குப்படி ஒரு ரூபாய் கொடுங்கள் அது போதும்!'' என்றான் சாமர்த்தியமாக.

கடவுள் யோசித்தார் ''அது ஒன்றும் கஷ்டமில்லைஒரு ரூபாய் கொடுத்து விடுகிறேன்! ஆனால் இப்ப வரும் போது நான் எடுத்துக் கொண்டு வரவில்லை! எங்கள் கணக்குப்படி ஒரு நாள் பொறுத்துக் கொள் பணத்துடன் வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரைவில் கால்நடை உத்தியோகத்தர் நியமனம்

## பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ்

(கொழும்பு)

கால்நடை உத்தியோகத்தர் களை தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையில் குளறுபடி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் விரைவில் இந்த நியமனம் வழங்கப்படும் என்றும் கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கால்நடை உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த ஜூன்மாதம் 7ஆம் திகதி இடம்பெற்றது.

அகில இலங்கை ரீதியாக மும்மொழிகளிலும் இடம்பெற்ற இப்பரீட்சையில் ஆங்கில, சிங்கள வினாத்தாள்களில் (விலங்கு பரிபாலனம்) ஆறு கேள்விகளில் ஐந்திற்கு மட்டும் பதில் அளிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. எனினும் தமிழ் மொழி மூல வினாத்தாளில் ஆறு கேள்விகளுக்கும் பதில் எழுதும்படி கேட்கப்பட்டிருந்தது. பரீட்சைகள் முடிவடைந்த பின்பே இவ்விடயம் பரீட்சார்த்திகளுக்கு தெரியவந்துள்ளது.

தமிழ் மொழி மூல வினாத்தாள்களிலும் சிங்களம், ஆங்கில வினாத்தாளில் குறிப்பிட்டபடியே வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்றாலும், அச்சுப்பிழை காரணமாகவே இந்தக் குளறுபடி இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது. எனவே இது குறித்து பரீட்சைத் திணைக்களம் நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்கும் என பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ் மேலும் தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலின்படி வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் ஒரு கட்டமாகவே இப்பரீட்சை நடத்தப்பட்டது. இது குறித்து கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பரீட்சை திணைக்கள ஆணையாளருடன் பேசியதாக பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார். (அ)

# அகதிகள் அனைவரையும் சிறையிலடைக்கும் கொள்கையை கைவிடுகிறது அவுஸ்திரேலியா


(சிட்னி)

அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் தேடிவரும் அகதிகள் அனைவரையும் சிறையிலடைக்கும் சர்ச்சைக்குரிய கொள்கையை அந்நாட்டு அரசாங்கம் கைவிட்டுள்ளது.

இதன் பிரகாரம் புகலிடம் கோரி வரும் அகதிகளுக்கான கடைசி தீர்வு ஒன்றாக மட்டுமே மேற்படி பின் தங்கிய இடங்களில் அமைக்கப்படவுள்ள சிறைச்சாலைகள் பயன்படுத்தப்படவுள்ளன. அத்துடன் சிறுவர்களை சிறையில் அடைக்கும் நடைமுறையும் நீக்கப்படவுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த புதிய நகர்வுக்கு மனித உரிமைக்குழுக்கள் வரவேற்பளித்துள்ளன. இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத்த பசுபிக் தீவுகளின் அகதிகளை நீண்ட காலம் தடுத்துவைக்கும் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அகதிகள் தொடர்பான கடுமையான விதிகளானது 1990களில் முன்னாள் தொழில்கட்சி அரசாங்கத்தால் நடை முறைப் படுத்தப்பட்டது. இந்தவிதிகள் புகலிடம் கோரும் அகதிகளையும் விசாவில் குறிக்கப்பட்ட காலத்தை விட அதிக காலம்அவுஸ்திரேலியாவின் தங்கியிருப்பவர்களையும் தடுத்து வைக்க வழிவகை செய்வதாக அமைந்தது.



இந்நிலையில் அவஸ்திரேலிய பழைமைவாத கட்சி பிரதமர் ஜோன் ஹவார்ட், 2001ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய மண்ணில் புகலிடம் கோருபவர்கள் காலடியெடுத்து வைப்பதை தடுக்கும் வகையில் அவர் களை சிறிய பசுபிக் தீவுகளினுள் தடுப்பு முகாம்களில் சிறை வைக்கும் புதிய கடுமையான விதிமுறையை நடைமுறைப்படுத்தினார். இவ்விதியானது சிறுவர்களையும் சிறையிலடைக்க அனுமதியளிக்கும்வகையில் அமைந்தது.

தற்போது புதிய அரசாங்க மானது இந்த சர்ச்சைக்குரிய அக திகளுக்கான நடைமுறையை முழுதாக கைவிடுவதாக அறிவித்துள்ளது. எனினும், விசா காலாவதியாகிய பின்னரும் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் தடுத்து வைக்கப்படக்கூடிய அபாயத்தை தொடர்ந்து எதிர்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இப்புதிய நடவடிக்கை காரணமாக அந்நாட்டு தடுப்பு நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 380 அகதிகள் விடுதலையாக களம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை குழுவான "அம்னெஸ்ரி இன்டர்நஷனல்" தெரிவிக்கிறது. (அ-6)

# இராசிபலன்

31.07.2008
(ஆடி16, வியாழக்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 06.44மணிவரை
புநர்பூசம் முன்னிரவு 08.24மணிவரை
இராகுகாலம் 01.33-03.03மணிவரை
சுபநேரம்-07.33-09.03 மணிவரை
போதாயன அமாவாசை

| | |
|---|---|
| மேடம் | ரோகநிலை, சுபசெய்தி, முயற்சி தாமதம், மனப்பயம். |
| இடபம் | காரிய அனுகூலம், போசன சுகம், பிரயாண நன்மை, தனவருவாய். |
| மிதுனம் | உணர்ச்சிவசப்படல், அதிக செலவு, குடும்பக்கவலை, வேலைச்சுமை. |
| கடகம | பெரியோர் சந்திப்பு, போசனசுகம். புதிய முயற்சி, கல்வியல் ஆர்வம். |
| சிங்கம் | மனஸ்தாபம், சுபசெலவு, சயன சுகக்குறைவு, பிரயாணம். |
| கன்னி | எடுத்தகாரியம் கைகூடும், தன வருவாய், கீர்த்தி. விருந்துபசாரம். |
| துலாம் | தொழில்மேன்மை, காரியசித்தி. நண்பர்கள் உதவி, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| தனுசு | பயந்த சூழல், ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், போசனசுகம். |
| மகரம் | சென்றஇடத்தில் செல்வாக்கு. முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | சத்துருஜெயம், மனமகிழ்ச்சி, காரியஅனுகூலம், உடல்நலம். |
| மீனம் | கௌரவக்குறைவு, வியாபார விருத்தி, வேலைச்சுமை. |

வளவன்

# ஆசிரியர் இடமாற்றங்கள்

2009ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் 15ஆம் திகதிய கடிதத்திற்கமைய ஆசிரிய இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.

இடமாற்றங்கள், வலயத்திற்குள்ளான இடமாற்றம், மாவட்டத்திற்குள் வலயங்களுக்கிடையிலான இடமாற்றம், மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் என வகுக்கப்பட்டுள்ளன.

இவ் இடமாற்ற விண்ணப்பங்கள் 17-09-2008ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான தகவல்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தற்காலிக இணைப்பிலுள்ள வெளி மாவட்ட ஆசிரியர்களின் விண்ணப் பங்கள் அவர்களது நிரந்தர வலயத்திற்கு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டியுள்ளதனால் முன்னுரிமை கொடுத்து உடன் செயற்படுமாறும், தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டது என்றும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ)



வலிகிழக்கு பண்பாட்டுப் பேரவை நடாத்திய பண்பாட்டுப் பெரு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் தீவகக்கல்வி வலய கர்நாடக சங்கீத பாடத்துக்கான ஓய்வுபெற்ற, உதவிக் கல்விப் பணிப்பாளரும்பிரபல கர்நாடக சங்கீத கலைஞரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பகுதிநேர விரிவுரையாளருமான சங்கீத ரத்தினம் கலைவாகுதி திருமதி ஸ்ரீ ரங்கராணி இராமச்சந்திரனுக்கு உதவி பிரதேச செயலாளரும் பெண் எழுத்தாளருமான செல்வி எஸ்.பிரேமினி பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரியில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரும் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந் தாட்ட சங்கத் தலைவருமான நோயல் விமலேந்திரன் தலைமையில் இடம்பெறவுள் ளது. (அ-21)

## மஹோற்சவம்

அளவெட்டி தெற்கு- வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற் சவத்தில் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாவில் 14 ஆம் திகதி வியாழன் மாலை சப்பறத் திருவிழாவும், 15 ஆம் திகதி வெள்ளி காலை 9.30 மணியளவில் இரதோற் சவமும் 16 ஆம் திகதி சனிக்கிழமை 10 மணி யளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

ஏனைய தினங்களில் தினமும் காலை 8.30 மணிக்கும் மாலை 3 மணிக்கும் திரு விழா ஆரம்பமாகும். (ஓ)

◆◆◆

(மருதங்கேணி)

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு கொடியே ற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தின ங்கள் உற்சவம் நடைபெறும்.

15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்தமும், 17 ஆம் திகதி ஞாயிறு பூங்காவன உற்சவத்துடன் விழா முடிவுறும். (ஓ-35)

◆◆◆

அனலைதீவு நயினாகுளம் சுழாவடியுறை அரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் 14 ஆம் திகதி வியாழக் கிழமை சப்பறத்திருவிழாவும், 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடி யிறக்கமும் இடம்பெறும். (அ)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளி யிடப்படும் மாதாந்த இதழான 'ஞானச் சுடர்' ஆடி மாத இதழ் வ.சிவனேசன் இயற்றிய கதிர்காமமுருகன் திருப்பள்ளியெழுச்சி மற் றும் அரிய பல ஆன்மீகக் கட்டுரைகளை தாங்கி வெளிவந்துள்ளது. (ஓ)

## காசத்தினை நிறுத்தும் உத்தி நூல் வெளியீடு

"காசத்தினை நிறுத்தும் உத்தி" நூல் வெளியீடும் மயிலிட்டி காசநோய் வைத்திய சாலையின் இடம்பெயர்வின் 17 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கோப்பாய் பிரதேச வைத் தியசாலை காசநோய் விடுதியில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் காச நோய்க் கட்டுப்பாட்டில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் எனும் விடயத்தில் வைத்திய கலா நிதி சி.யமுனானந்தா உரையாற்றுவார். (அ)

# அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட இணுவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி வெற்றிடமாகின்றது.

இவ்வெற்றிடத்தை நிரப்புமுகமாக இலங் கை அதிபர் சேவை வகுப்பு I / இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I மற்றும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2- I, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2- I, வகுப்பு 2- IIஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர் கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கு மாறும், மேற்படி பதவிகளுக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண் ணப்பிக்கலாம் எனவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரியில் நாளை ஆரம்பம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூ ரியில் DR.W.R. HOLMS கல்லூரியின் ஞாப கார்த்தமாக யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட் சுற்றுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் நாளை ஆண் களுக்கான போட்டிகளும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் பெண் களுக்கான போட்டிகளும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து ஆண், பெண் இருபா லாருக்குமான இறுதிப் போட்டிகள் இடம் பெறும். மேற்படி சுற்றுப் போட்டியில் ஆண் கள் பிரிவில் யாழ். புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய ஐந்து அணிகளும் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். கன்னியர் மடம் ஆகிய மூன்று அணி களும் பங்குபற்றவுள்ளன.

இச்சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங் களைப் பெறும் அணிகள் அகில இலங் கைப் பாடசா லைகள் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட் டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு பெறுவதோடு அகில இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட சங்கத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. (அ-27)

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு

(சங்கானை)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் -2008 இன் கீழ் வலி மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு பல் வேறு வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவ தற்காக ரூபா 7இலட்சம் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு தளபாடம் வழங்கல், அராலி இந்துக் கல்லூரியில் வகுப்பறைக ளுக்கு கொங்கிறீட் தரையிடுதல், சங்கானை சித்தான அ.மி.த.க பாடசாலையின் சுற்று மதில் அமைத்தல், மூளாய் அ.மி.த.க பாடசா லையை புனரமைத்தல், வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் வகுப்பறை புனரமைத்தலும் மின்விநியோகமும், வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி முன்பள்ளிக்கான மலசலகூடம் அமைத்தல், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு கணனி வழங் கல், வட்டுக்கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலைக்கு தளபாடம் வழங்கல். ஆகிய பாடசாலைகளுக்கான வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. (ஓ-15)




## உணவகங்கள் திறக்கப்படாமையினால் பயணிகள், பஸ் ஊழியர்கள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

காலை 6, 6.15, 6.45 மணிக்கு ஊர்கா வற்றுறையிலிருந்து புறப்படும் பஸ்களின் ஊழியர்கள், பயணிகள் அனைவரும் காலையில் உணவகங்கள் திறக்கப்படாமை யினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இ.போ.ச. வடபிராந்திய தீவக சாரதிகள் இரவு பஸ்கள் தங்கிச் செல்வதால் காலை யில் தேநீர் இன்றிச் செல்ல வேண்டியுள் ளதாகத் தெரிவித்தனர். (ஓ-72)

## கணித ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.சாதாரண தரத்தில் கணித பாடத்தில் மாணவர் பெறுபேறுகளை உயர்த் துவதற்காக வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயம் நடத்தவுள்ள செயற்றிட்டத்தில் கோப்பாய் கோட்டத்தில் ஏற்கனவே இணைக் கப்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளை இணைப்பதற்கான கலந்து ரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத் தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலைகளின் கணித ஆசிரி யர் ஒருவரைக் கலந்துரையாடலுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள் ளார். (ஓ)

## ஆடி அமாவாசை தினத்தில் விடுமுறை வழங்க வர்த்தக சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தீர்மா னத்திற்கு அமைய வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு ஆடி அமாவாசை கடமை களைச் செய்வதற்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ். வணிகர் கழகம் வேண்டு கோள் விடுத்துள்ளது. (அ)

## உடுவில் மகளிர் கல்லூரியில் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடை யே 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவின ருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை உடுவில் மகளிர் கல்லூரி அகில இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடாத்தவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளை உடுவில் மகளிர் கல்லூரியுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று போட்டி யில் கலந்துகொள்ளலாம் என்றும் இச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறு கின்ற பாடசாலை அணிகளுக்கு அகில இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத் தின் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடை யேயான சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-27)

## தோழர் வைத்திலிங்கம் நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் தோழர் வைத்திலிங்கத்தின் நினை வுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.189, வேம்படி வீதியிலுள்ள "அகவிழி" காரியாலயத்தில் எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் நடை பெறவுள்ளது.

நினைவுரையை வடமாகாண ஆசிரியர் சங்க முன்னாள் தலைவர் வே. சிவராசா நிகழ்த்துவார். (அ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மிக நிகழ்வு தொட ரில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு வில்லிசைக் கலைஞர் க. சத்திய தாஸ் பக்கவாத்திய சகிதம் 'பக்திப்பாடல்' வழங்குவார். (ஓ-35)

## சமய பாடப் பரீட்சை

(நீர்வேலி)

நீர்வேலி காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை வருடா வருடம் மாணவரி டையே நடாத்திவரும் சமய பாடப் பரீட்சை இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்களூடாக பரீட்சை செயலாளர் (கலாநிதி தி.வேல்நம்பி) காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை, நீர்வேலி என்ற விலாசத் துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கு மாறு சபையின் பொதுச் செயலாளர் கேட் டுள்ளார். (ஓ)







வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் GTZ அனுசரணையுடன் அடிப்படை கல்வித்துறை அலகு (BESU) செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களுக்குமான ஆரம்ப பிரிவு "பரிகாரக்கல்வி" செயலமர்வுகள் யாழ். ஆசிரிய வள நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வளவாளர்கள் நெறிப்படுத்துவதையும், பயிலுனர்கள் குழுவேலையில் ஈடுபடுவதையும், வகுப்பறைச் செயற்பாடுகள் அவதானிக்கப் படுவதையும் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 53



### கோல்புறாக் கெமறன் திருத்தத்தின் பின்

சட்டசபை நிறுவப்பட்ட போதிருந்த ஆள்பதி வில்மட்ஹோட்டன் அவர்கள் போனபின் ஆள்பதியாக இங்கே வந்தவர் ஸ்ரூவாட் மக்கென்சியாவர். அவர் இங்கிலாந்திலே பாராளுமன்றத்திலே பிரதிநிதியாய் இருந்தவர். ஒருகாலத்தில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் நிர்வாக கர்த்தாவாகவும் இருந்தவர். ஆகவே அவருடைய பட்டம், பதவிகள் பகட்டானவை. அதி கௌரவ யேம்ஸ் அலெக் சாண்டர் ஸ்ரூவாட் மக்கன்சி அவர்கள் 7-11-1837 தொடக்கம் 5-4-1841 வரை இலங்கையில் ஆள்பதியாய் இருந்தவர். அவருடைய காலத்தில் இலங்கை வருமானம் வெகுவாகக் குறைந்தபடியால் வீதிகள் அமைக்கப்படுதலில் தாமதம் ஏற்படலாயிற்று.

ஆள்பதி மக்கன்சி அவர்கள் இலங்கைக்கு வந்த போது தம்முடைய அந்தரங்கக் காரிய தரிசியாக A.M. பெர்குசன் என்பவரை அழைத்து வந்தார். அப் பெரியார் சிலகாலஞ் செல்ல ஒப்சேவர் பத்திராதிபராகி அப் பத்திரிகையின் உரிமையாளராயும் பொறுப்பேற்றுக்கொண்டார். ஆள்பதி மக்கன்சி ஒரு சமயம் கிழக்கு மாகாணத்ததுக்குப் போன்போது அங்கே வேடர் மத்தியில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். அதனால் உடல்நலக்-குறைவு காரணமாக அவர் தம் பதவியை விலகல் செய்ய அவருக்குப் பின் ஆள்பதி சேர் கொலின் கமல் அவர்கள் பதவியேற்றார். ஆள்பதி கமல் அவர்கள் 15.1.1841 முதலாக 18.1.1847, ஈறாக பதவி வகித்தார். இவர் சிறந்த தளபதி எனப் போற்றப்படும் வெலிங்ரன் பிரபுவின் படைகளில் பயிற்சி பெற்றவர். பல நாடுகளில் போர்க்களங்களைக் கண்டவர்.

மலைநாடுகளில் கோப்பித் தோட்டங்கள் உண்டாக்குவதற்குக் காடுகளைப் பெருந் தொகையாக வாங்குவதில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தாரும் இங்கிலாந்தின் முதலாளிகளும்

**மீள் பார்வை**

ஈடுபடுவாராயினர்.

அதனால் 1834 ஆம் ஆண்டில் 50 ஏக்கர் தோட்டம் இருந்த நாட்டில் 1838 ஆம் ஆண்டளவில் 6500 ஏக்கர் தோட்டங்கள் ஏற்படுவனவாயின. அதன்பின் ஆண்டு தோறும் சராசரியாக 42000 ஏக்கர் நிலம் விலைப்படுவதாயிற்று. இலங்கைக் காடுகளை வெள்ளையர் ஏக்கர் ஒன்று ஐந்து சிலிங் காசுக்கே வாங்கினார்கள்.

இவ்வளவு இலாபகரமாகத் தோட்டங்கள் உண்டாக்க வழியேற்பட்டதால் ஆள்பதி மக்கன்சி, படைத்தலைவர், குடியேற் றக் காரியதரிசி ஆகிய பெரியவர்களும் ஏனைய உத்தியோகத்தவரும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கினார்கள். அந் நிலங்கள் பொன் கொழிக்கும் தோட்டங்களாக்கப்பட்டன.

கமல் ஆள்பதியான முதலாண்டிலேயே இலங்கைக் கோப்பித் தோட்டத்தின் வளர்ச்சி உச்ச நிலையடைவதாயிற்று. அவ்வாண்டில் ஏறக்குறைய 78500 ஏக்கர் நிலம் புதிதாகத் திருத்தப்பட்டது. வெள்ளைக்காரர் குடியியற் சேவையிலிருந்து கொண்டே பெருந்தொகையான காடுகளை வாங்குவராயினர். அதனால் தமது வருமானம் அதிகரிக்கும் என அவர்கள் எண்ணினார்கள். இக்காலத்திலே தான் இலங்கையில் வெள்ளைக்காரர் பல வங்கிகளை நிறுவுவராயினர். அவர்கள் இலங்கை வங்கி என்ற பெயருடன் ஒரு வங்கியும், இந்திய வங்கி என்ற பெயருடன் ஒரு வங்கியும் ஆரம்பித்தார்கள். இதனால் இலங்கையைப் பரிபாலிக்க வந்த ஆள்பதி முதல் குடியியற் சேவையாளர் ஈறாக எல்லோரும் கோப்பித் தோட்டப் பைத்தியத்தில் இருந்ததைக் குடியேற்ற மந்திரி வெறுத்தார். எனவே அவர் ஆள்பதிக்கு ஒரு சுற்றுநிருபம் அனுப்பினார். அதன்படி குடியியற் சேவையாளர் தோட்டங்கள், விவசாயம், வர்த்தகம் என்பவற்றில் ஈடுபடுதலாகாது. இதுவரை ஈடுபட்டவர்கள் தங்கள் வியாபாரமாகியவற்றை விற்று விட்டு உத்தியோகத்தை மாத்திரம் பார்த்தல் வேண்டும். அன்றேல் உத்தியோகத்தை விலகல் செய்துவிட்டு அவற்றை மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டது. இன்னுமொரு சுற்று நிருபத்தில் குடியியற் சேவையாளர் சிங்களம் அல்லது தமிழில் பாண்டித்தியமடையாவிட்டால் அவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடையாது என்று எழுதிய குடியேற்றக் காரியதரிசி குடியியற் சேவையை நல்ல முறையிற்றிருத்தி அமைத்தார்.


ஆள்பதி கமல் அவர்கள் காலத்திலேதான் ஆங்கிலேயர் பலர் வர்த்தக நிலையங்களை இலங்கையில் ஆரம்பித்தார்கள். அக்காலத்திலே தான் யோச்வால் என்ற பெரியாரும் இலங்கையில் வந்து குடியேறினார். அவர் வர்த்தகம், தோட்டம் ஆகிய துறைகளில் நல்ல உத்தியோகம் பார்த்த பின் சட்ட சபையிலே நியமனம் பெற்று அளப்பரும் சேவை செய்தார். அவருடைய சேவையை இலங்கை


க.சி.குலரத்தினம்

யர் இன்றுந்தான் நினைவுகூர்ந்து அவரைப் பெரிதும் மதிக்கிறார்கள். அவர் காலத்திலே தான் சாள்ஸ் லோறன்ஸ் அம்புறோஸ் அவர்களும் பிரகாசித்தார்கள். அப்புக்காத்தாக இருந்த றிச்சாட் மோகன் என்ற பெரியார் சட்டதுறையில் மெத்தப் பிரகாசித்து ஆள்பதிகளுக்கு அந்தரங்க ஆலோசனை கூறுபவராய் இருந்தார்.

அக்காலத்திலே தான் சேர் எமர்சன் ரென்னன்ற் என்பார் குடியேற்றக் காரியதரிசியாய் இருந்து அரிய பணிபுரிந் தார். ரென்னன்ற் இலங்கையைப் பற்றி எழுதிய புத்தகம் இன்றும் இலக்கியமாகவே இருக்கிறது.

(தொடரும்)






International Medical Health Organization நிதியுதவியுடனும் சங்கரத்தை இந்து வாலிபர் சங்க அனுசரணையுடனும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நடமாடும் சேவை அண்மையில் சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் நடைபெற்றது.

இதில் டாக்டர் மகேசன், டாக்டர் சுரேந்திரகுமார், டாக்டர் விமலன், டாக்டர் சிவதீபன் ஆகியோர் நோயாளிகளைப் பார்வையிடுவதையும், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் திருச்செந்தூரன் நோயாளி ஒருவருக்கு இரத்த பரிசோதனை செய்வதற்காக இரத்தம் எடுப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குரு)

# 19 ஆம் நூற்றாண்டு 5

## ஈழத்துத் தமிழ் இலக்கியம்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா



### பதிப்பு முயற்சிகள்

அச்சியந்திரப் பயன்பாட்டின் இன்னொரு பரிமாணமாகப் 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பதிப்பு முயற்சிகளைக் குறிப்பிடலாம். ஓலைச் சுவடிகளாகப் பயன்பட்டு வந்த நூல்கள் "அச்சுப்புத்தக ரூபத்தில்" பல பிரதிகள் தோன்றுவதற்கு அச்சியந்திர வசதி பயன்பட்டமையை முன்னரே குறிப்பிட்டோம்.

19 ஆம் நூற்றாண்டிலே ஈழநாட்டில் மிகச் சிறந்த பதிப்பாசிரியர்கள் தோன்றினர். அச்சுப் பொறியைப் பயன்படுத்திப் பண்டைத் தமிழ் நூல்களை அழிந்தொழிந்து போகவிடாது பேணவேண்டுமென்ற உந்துதல் இக்காலத் தமிழறிஞர்கள் மத்தியிலே காணப்பட்டது. பதிப்புப் பணியிலே தமிழகத்திற்கு வழிகாட்டியாகவும் ஈழநாடு அமைந்தது என்பர்.

தமிழ்மொழியையும் ஆங்கிலத்தையும் சிறப்புறக் கற்ற தமிழ் அறிஞர்கள் நமது பண்டைய இலக்கியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற தேவையை உணர்ந்து பதிப்பு முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டனர். தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் பரப்புவதும் தமது தலையாய கடமை என உணரும் நோக்கு 19 ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களுக்கு உருவானது.

தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்களின் தொன்மையைத் தேடும் ஆவலுக்கு இவர்கள் பெற்ற மேலைப்புலக் கல்வி முறைமைகளும் மிஷனரிமார்களின் செயற்பாடுகளும் காரணமாயமைந்தன எனலாம்.

தமிழ் நூற்பதிப்புத் துறைக்குக் கால்கோள் அமைத்தவர் எனப் போற்றப்படுபவர் ஆறுமுக நாவலர் (1822-1879), தமிழ் நூற் பதிப்புத் துறையிலே இவருக்குத் தனியானதோர் சிறப்பிடம் உண்டு. இவரது பதிப்புக்கள் "சுத்தப் பதிப்பு" என்று தமிழ் கூறும் நல்லுலகினால் அங்கீகரிக்கப்பட்டவை. இலக்கிய இலக்கண சமயச் சார்பாக ஏறத்தாழ ஐம்பது நூல்கள் வரை இவர் பதிப்பித்துள்ளார். "நாவலர் பதிப்பு" என்ற தனித்துவ முத்திரையை இவரது பதிப்பு நூல்களுக்குத் தமிழியல் ஆய்வுலகம் இன்றும் வழங்கி வருவது குறிப்பிடக்கூடியதாகும்.

நாவலரைத் தொடர்ந்து பலர் பதிப்பு முயற்சிகளிலே ஈடுபட்டனர். பழந்தமிழ் நூற் பதிப்புத் துறையில் தீவிரமாக ஈடுபட்டுழைத்து அழியாப் புகழ்பெற்ற சி.வை. தாமோதரம்பிள்ளை (1832-1901), ச.தம்பிமுத்துப்பிள்ளை (1857-1934), வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை (1843-1900), காரைதீவு மு. கார்த்திகேய ஐயர் (1819-1898), வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை (1837-1897) முதலியோர் குறிப்பிடக்கூடிய பதிப்பாசிரியர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

ஈழத்துப் பதிப்பாசிரியர்களிலே சி.வை. தாமோதரம்பிள்ளைக்குத் தனித்துவமானதோர் சிறப்பிடம் உண்டு. பதிப்பு நெறிமுறைகளைப் பின்பற்றிச் சிறந்த முறையிலே பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவரிடமிருந்து ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் அதற்கிணையான ஆங்கிலப் புலமையும் பழந்தமிழ் நூல்களைப் பழுதறப் பதிப்பிக்க உதவின எனலாம்.

பழந்தமிழ் நூற் பதிப்புத்துறையிலே இவரீட்டிய சாதனைக ளைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியோர் விதந்து பாராட்டியுள்ளனர்.

தமிழ்நூற் பதிப்புத்துறையிலே அயராது ஈடுபட்டுழைத்துப் புகழீட்டிய உ.வே.சாமிநாதையருக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர் சி.வை. தாமோதரம்பிள்ளையே எனலாம். உ.வே. சாமிநாதையர் பதிப்புக்களையும் தாமோதரம் பிள்ளை பதிப்புக்களையும் ஒப்புநோக்கி ஆய்வு செய்த பேராசிரியர் க.கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுவார்.

*......................இன்று தாமோதரம் பிள்ளை பதிப்புக்களையும் சாமிநாதையர் பதிப்புக்களையும் ஒப்புநோக்கி ஆராயும் வாய்ப்பு எமக்கு உண்டு. அவ்வாறு பார்க்கும் போது காலாவாராய்ச்சி, சரித்திரவுணர்வு, ஒப்பியல்நோக்கு, திறனாயும் தன்மை, ஆய்வறிபு நேர்மை, முறையியல் நுட்பம் ஆகியன ஐயரிலும் பார்க்கப் பிள்ளையிடத்து அதிகமாகக் காணப்படுதல் தெளிவு.*

இவ்வாறு சி.வை.தாமோதரம்பிள்ளை போற்றப்படுவதற்கு அவர் ஈழநாட்டில் பெற்ற இருமரபுக் கல்விப் (மரபுவழி+நிறுவனவழி) பின்புலமும் அவர் வகித்த பதவிகளும் குறிப்பிடக் கூடிய காரணிகள் எனலாம்.

19 ஆம் நூற்றாண்டிலே பழந்தமிழ் நூற் பதிப்புத் துறையில் ஈழத்து அறிஞர்கள் காட்டிய ஆர்வத்தின் தொடர்ச்சியாக 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை சிறப்பான முறையிலே பல பழந்தமிழ் நூல்கள் ஈழநாட்டிலே பதிப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

### பாடநூல்கள்

19 ஆம் நூற்றாண்டிற் கல்வி நிறுவனமயப்பட்டுப் பரவலாகிய சூழ்நிலையில் கற்றல் கற்பித்தலின் பொருட்டுப் பாடநூல்களின் பயன்பாடும் அதிகரித்தது.

நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கெனப் பாடத்திட்டம் (Syllabus) பகுத்து வரையறை செய்யப்பட்டிருந்தது. மிஷனரிமார் தமது பாடசாலைகளிற் கற்கும் மாணவர்களுக்கெனப் பலவிதமான பாடநூல்களையும் ஆக்கி அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

அச்சியந்திரம் அவர்கள் வசம் இருந்தமையால் இம் முயற்சி இலகுவிலே சாத்தியமாயிற்று.

19 ஆம் நூற்றாண்டிலே தோன்றிய பாட நூல்கள் இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம்.

ஒன்று:-பாரம்பரியமாக நிலவிவந்த மொழி, இலக்கிய, இலக்கண, சமய நூல்கள்.

இரண்டு:- நவீன கல்விப் போக்குக்கு அமைவான அறிவியல் சார்பான நூல்கள்.

(தொடரும்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

**முன்னோடிப் பரீட்சை**
**Pilot Examination**

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

கணக்கீடு - I (பகுதி I)
Accounting -I (Part I)

1 மணித்தியாலம்
One Hour

**வினா இலக்கம் 31 தொடக்கம் 35 வரையான கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின்(X) எனவும் அடையாளமிடல் போதுமானது**

31) விற்பனை மீதான பெறுமதிகூட்டிய வரி ரூபா 20000,பெறுமதி கூட்டிய வரிக்கணக்கில் வரவில் இடப்படும். ( )

32) பங்காளர் மூலதனக் கணக்குகள் நிலையானதாக பராமரிக்காவிடில் ஆதன மீள விலைமதித்தல் மிகை பங்காளர் நடப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படும். ( )

33) அறவிட முடியாக்கடன் தொடர்பாக கடன்படுனர் கட்டுப்பாட்டு கணக்கில் பதிவு இடம்பெறாபொழுதில் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்படும் ( )

34) சகல மூல ஆவணங்களும் கணக்காய்வு செய்த பின்னர் மூல ஏடுகளிலும் பேரேடுகளிலும் குறிப்புக்கள் மேற்கொள்ளப்படுவது கட்டாயமாகும். ( )

35) காசேடு மூல ஏடாகவும், பேரேடாகவும் தொழிற்படும் ( )

**வினாஇலக்கம் 36 தொடக்கம் 40 வரையானவற்றுக்கு வெற்றிடங்களை பொருத்தமான பதங்கொண்டு நிரப்புக.**

36) இறுதி இருப்புக்களில் பெறுமதி அதிகரிப்பு மொத்த இலாபத்தை .....................வுடன் வணிகத்தின் திரவநிலையினை ............................ செய்யும்.

37) விற்க அல்லது திருப்புக எனுமடிப்படையில் பட்டியலிட்டு அனுப்பப்பட்ட ரூபா18000 கிரயமுடைய பண்டங்கள் கணக்காண்டு இறுதிவரை விற்கப்படாதிருப்பின் ............................ கணக்கில் வரவிலும், ............................ செலவிலும் பதிவதுடன் இறுதி இருப்பின் பெறுமதி ............................சீராக்கப்படும்.

38) சகல ஏற்பாடுகளும் ............................ அல்லது............................ நிச்சயமாக குறிப்பிட முடியாத நிகழ்வுகளாகும்.

39) நிதி அறிக்கைகளில் குறிப்பாகவேனும் நிகழத்தக்க சொத்தொன்று பிரதிபலிக்கப்படுவதற்கு பின்வரும் இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவையாவன,
1) ............................................................
2) ............................................................

40) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன்படி சீராக்கப்படும் நிகழ்வு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு ............................ முன்னர் இறுதி பெறுபேறு அறியக்கிடைத்தல் வேண்டும்.

**முன்னோடிப் பரீட்சை**
**Pilot Examination**

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

கணக்கீடு - I (பகுதி II)
Accounting -I (Part II)

2 மணித்தியாலங்கள்
2 Hours

**முதலாவது வினா கட்டாயமானது. எல்லாமாக 05 வினாக்களுக்கு விடையளிக்க**

(01) பங்குடமையில் பங்காளர் ராஜனும், குமரனும் இலாப நட்டங்களை 2:1 எனப் பகிரும் பங்காளர்களாவர். உடன்படிக்கை வருமாறு, மூலதனத்திற்கு 6% சதவீத ஆண்டு வட்டியும், பங்காளர் ராஜன் ஆண்டு சம்பளமாக ரூபா 24,000/- யும் பெறுவார்.

2006 எப்ரல் 01 இல் அகிலா என்பவரும் பங்குடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

i)அகிலா மூலதனத்திற்கும் நன்மதிப்பில் அவரின் பங்கிற்குமாக முறையே ரூபா 100000/-, ரூபா40000/- இனையும் கொண்டு வருதல் வேண்டும். நன்மதிப்பிற்கென புறம்பான கணக்குகள் பராமரிக்கப்படமாட்டாது.
ii) மூலதனத்திற்கு 6% சதவீத வட்டி வழங்கப்படுவதுடன் பங்காளர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது.
iii)ராஜன்.குமரன்,அகிலா இலாபநட்டங்களை 3:2:1 என பகிர்வர்.

2006 டிசெம்பர் 31 இல் பிரித்தெடுக்கப்பட்ட பங்குடமையின் பரீட்சைமீதி வருமாறு,

| | வரவு | செலவு |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 200000 | |
| வான் திரண்ட தேய்வு | | 42600 |
| தளபாடங்கள் | 210000 | |
| தளபாட திரண்ட தேய்வு | | 34800 |
| கையிருப்பு 2005 டிசெம்பர் 31 இல் | 186400 | |
| கொள்வனவுகள் | 692650 | |
| விற்பனைகள் | | 984250 |
| சம்பளங்கள் | 112000 | |
| வாடகை | 32000 | |
| விற்பனை தரகு | 21800 | |
| கடன்படுனரும் கடன்கொடுனரும் | 246800 | 161200 |
| காசும் வங்கிமீதி | 3795 | |
| நிர்வாக செலவுகள் | 32400 | |
| விளம்பரக் கட்டணங்கள் | 17805 | |
| அறவிடமுடியாக்கடன் | 7200 | |
| காசு அறிமுகம்- அகிலா | | 140000 |
| பங்காளர் மூலதன கணக்கு -ராஜன் | | 300000 |
| குமரன் | | 100000 |

பின்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றன

1)2006 டிசெம்பர் 31 இல் இருப்புக்கள் ரூபா 214500
2)சம்பள கணக்கானது ராஜனால் பற்றுச்செய்யப்பட்ட 11மாத சம்பளத்தையும் உள்ளடக்கும்
3)2006 ஜூலை மாதம் முதல் பங்குடமையின் விற்பனையானது முன்னைய மாதமொன்றின் சராசரி விற்பனையிலும் 50% சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.
4)அகிலா அனுமதிக்கப்பட்ட தினத்தில் பங்குடமை தாபனத்தினால் வாகனமொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ் வாகனம் 2005 - ஜனவரி 01 இல் ரூபா 20000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனது கிரயத்தை ராஜனும், குமரனும் ஏற்றுக்கொண்டனர். இவை தொடர்பாக எச்சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.
5) பங்குடமை குறைந்து செல்லும் மீதி முறையினை பயன்படுத்தி தளபாடங்களுக்கு 10% சதவீதமும்,வாகனங்களுக்கு 20% சதவீதமும் ஆண்டுக்கு பெறுமானத் தேய் விடப்படுகின்றது.
6) மொத்த இலாபம்,விற்பனை பங்கீட்டு செலவினங்கள் என்பன விற்பனை விகிதாசாரப்படி பகிர்வதுடன் குறிப்பிட்டு சொல்லப்படாத செலவுகளும் வருமானங்களும் கால அடிப்படையில் பகிர்க.

தேவைப்படுவது
1) நன்மதிப்பு சீராக்கத்திற்கான நாட்குறிப்பு பதிவு
2) 2006. டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்ட கணக்கு,பகிர்கணக்கு
3) பங்காளர் மூலதனக் கணக்கும்,பங்காளர் நடைமுறைக்கணக்கும்.
4) 2006 டிசெம்பர் 31 இல் உள்ளபடி ஐந்தொகை.

(02) சிங்ககிரி நிறுவனத்தின் ஏடுகளில் 2007 டிசெம்பர் 31 இல் பிரித்தெடுத்து தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியின் வரவுப்பக்க கூட்டுத்தொகை ரூபா 119420/- செலவுபக்க கூட்டுத்தொகை ரூபா 124280/- ஆகக் காணப்பட்டது. வேறுபாடு ரூபா 4860/- தொங்கல் கணக்கில் இட்டதுடன் இலாபநட்ட கணக்கொன்றை வரைந்து இதன்படி தேறிய இலாபம் ரூபா 42000/- ஆகும்.

பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

i)கூலி செலவுக் கணக்கின் வரவுமீதி ரூபா 1000 மிகையாக கூட்டப்பட்டிருந்தது.
ii)பெற்ற கழிவு ரூபா 450 விநியோகத்தர் கணக்கில் பதியப்பட்ட போதிலும் பெற்ற கழிவு கணக்கில் பதியப்படவில்லை.
iii)பந்துலவிற்கு கடனுக்கு விற்பனை ரூபா 1200 தொடர்பாக எப்பதிவும் ஏடுகளில்லை.
iv)வாடிக்கையாளர் தூசாரவிடமிருந்து வசூலித்த காசோலை ரூபா 620 அவர் கணக்கில் வரவில் இடம்பெற்றிருந்தது.
v)மீளப்பெற்ற காப்புறுதி தவணைக்கட்டணம் ரூபா 300 காசேட்டில் வரவில் பதிந்த போதிலும் வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.
vi) அலுவலக உபகரணக் கொள்வனவு ரூபா 5900 தவறுதலாக உபகரண செலவு கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
vii)வழங்குனர் "பெமிலி நீட்ஸ்" க்கு திருப்பியனுப்பிய பண்டங்கள் ரூபா 2000 வழங்குர் கணக்கில் செலவும், கொள்வனவு திரும்பல் கணக்கில் வரவு வைக்கப்பட்டுமிருந்தது.
viii) கொள்வனவு பேரேட்டு நிலுவை ரூபா 150 கடன்கொடுனர் பேரேட்டு பட்டியலுள் தவறவிட்டப்பட்டமையுடன் கடன் கொடுனர் பேரேட்டு பட்டியல் மீதியின் மொத்தம் கடன்கொடுனர் என பரீட்சைமீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
ix)செலுத்திய வாடகை ரூபா 4000 தவறுதலாக வாடகை வருமதி கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.
x) அலுவலக எழுதுகருவிகளும் காகிதாதிகளும் கொள்வனவு ரூபா 1100 தவறுதலாக தபால் தொலைபேசி கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

தேவைப்படுவது
1) மேற்கூறப்பட்ட தவறுகளை திருத்துவதற்கான குறிப்பேட்டு பதிவுகள்
2) தொங்கல் கணக்கு

(03) ஹார்ட்லி ஸ்டோர்ஸ் மார்ச் 31 இல் தனது கணக்கு ஏடுகளை மூடுகின்றது. ஆனால் 2007 ஏப்ரல் 06 வரை பௌதீக ரீதியான இருப்பெடுத்தலை மேற்கொள்ளமுடியவில்லை. இருப்புத்தாளில் உள்ளடக்கப்பட்ட சகல உருப்படிகளும் கிரயத்தில் மதிப்பிடப்பட்டன. கையிருப்புக்களின் பெறுமதி கிரயத்தில் ரூபா216400 பின்வரும் தரவுகள் அறியக்கிடைத்தன.

1) 2007 ஏப்ரல் 01இலிருந்து இருப்பெடுத்தல் இடம்பெற்ற தினம் வரை இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள். கொள்வனவுத் தொகை ரூபா 48400 விற்பனைகள் ரூபா 74100, விற்பனை திருப்பங்கள் ரூபா 2100, ரூபா 6000ற்கு பட்டியலிடப்பட்ட பண்டங்கள் (18.04.2007வரை) விநியோகிக்கப்படவில்லை. ஹார்ட்லி நிறுவனம் நிலையான சதவீதமொன்றை இலாப எல்லையாக கிரயத்தில் 50% சதவீதம் உழைக்கத்தக்கவாறு விற்பனை விலையிடுகிறது.

2) இருப்புத்தாளின் உபகூட்டுத்தொகை ரூபா 156500/-அடுத்ததாளிற்கு ரூபா 165500/- என தவறாக முன்கொண்டு செல்லப்பட்டதுடன்,பொதி செய்யும் பொருள் இருப்புக்களின் கிரயம் ரூபா 1600/- உம் பயன்படுத்தப்படாத எழுதுகருவி பொருள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 2800/- உம் இருப்பெடுத்தலுக்குள் உள்ளடங்கியிருந்தது.

3) 2007 மார்ச் 31 இல் கொள்வனவாக பிரதிபலிக்கப்பட்ட ரூபா 164400 பெறுமதியான பண்டங்கள் 2007 ஏப்ரல் 2ஆவது வாரம் வரை சுங்க பண்டகசாலையிலிருந்து வெளியகற்றப்படவில்லை.

4) விற்க அல்லது திருப்புக எனுமடிப்படையில் வாடிக்கையாளருக்கு கிரயத்தில் 50% சதவீத இலாபம் சேர்த்து அனுப்பப்பட்ட ரூபா 5400/- க்கு பட்டியலிடப்பட்ட பண்டங்களுள் 1/3 பங்கு 06 ஏப்ரலில் திருப்பியனுப்பப்பட்டன. எஞ்சியவை அவர்வசமே காணப்பட்டது.

5) இருப்பெடுத்தல் தாளுக்குள் உள்ளடக்கப்பட்ட ரூபா 14400/- கிரயமுடைய பண்டங்கள் பழுதடைந்து காணப்பட்டமையினால் அவை ரூபா 12000/-ற்கு விற்கலாம் எனவும் விற்பனைக்கு தரகாக 5% செலுத்தப்பட வேண்டுமெனவும் மதிப்பிடப்பட்டது.

தேவைப்படுவது,
1) 2007 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கில் உள்ளடக்குவதற்காக இருப்பின் பெறுமதி கணிக்க.

04) ஜேம்ஸ் ரிச்சர்ட் கம்பனி பெறுமதிகூட்டிய வரிசெலுத்த பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். 2007 ஜூன் 30 இல் பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு,

| விபரங்கள் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனைகள் (பெறுமதி கூட்டிய வரி சேர்க்கப்பட்டது) | | 94864 |
| கொள்வனவு (பெறுமதி கூட்டிய வரி சேர்க்கப்பட்டது) | 63360 | |
| கையிருப்பு (பெறுமதி கூட்டிய வரி நீங்கலாக) | 2840 | |
| தளபாட கணக்கு | 12600 | |
| தளபாட பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு கணக்கு | | 4744 |
| மோட்டார் வான் கணக்கு | 21000 | |
| மோட்டார் வான் தேய்வு ஏற்பாட்டு கணக்கு | | 4000 |
| செலுத்திய செலவுகள் (பெறுமதி கூட்டிய வரியுடன்) | 20075 | |
| களியாட்ட செலவுகள் (பெறுமதி கூட்டிய வரியுடன்) | 440 | |
| கடன்படுனரும், கடன்கொடுனரும் | 1946 | 1452 |
| செலுத்திய பெறுமதி கூட்டிய வரி | 212 | |
| காசும் வங்கி நிலுவையும் | 587 | |
| மூலதனம் | | 18000 |
| | 123060 | 123060 |

1) 2007.01.01 இல் பெறுமதி கூட்டிய வரி சேர்க்கப்பட்ட பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் ரூபா 8800, மோட்டார் வான் ரூபா 11000/- என்ற முழுத்தொகையும் குறித்த சொத்துக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
2) தளபாடங்களும், மோட்டார் வாகனங்களும் முறையே 10%, 20% என நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகிறது.
3) 2007 ஜூன் 30 இல் விற்கப்படாத இருப்பு பெறுமதி ரூபா 2420 (கிரயத்துடன் பெறுமதி கூட்டிய வரி சேர்க்கப்பட்ட பெறுமதி)
4) பெறுமதி கூட்டிய வரி வீதம் 10%

தேவைப்படுவது
1) 2007 ஜூன் 30 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்ட கணக்கும் அத்தினத்தில் உள்ளபடியான ஐந்தொகை

(தொடரும்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13


பௌதிகவியல் - I
Physics - I

2 மணித்தியாலங்கள்
2 Hours

முக்கியம்:-
- இவ்வினாத்தாள் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து அதனை விடைத்தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிக்க.


$(g=10\ N\ kg^{-1})$

22) A யின் திணிவு 2m ஆகும். மற்றைய எல்லாக் குண்டுகளும் m திணிவை உடையவை. A யானது ஒரு பக்கத்திற்கு இழுக்கப்பட்டு விடப்படும் போது அது B யுடன் V வேகத்துடன் மோதுகின்றது. எல்லா மோதுகைகளும் பூரணமீள் தன்மை உடையவை. A யானது B யுடன் மோதிய பின்னர்,



1) A யானது V கதியுடன் பின்னதைக்கும். மற்றைய எல்லாம் ஓய்வில் இருக்கும்.
2) A யானது உடனடியாக ஓய்வுக்கு வர Dயும், Eஆனது V கதியுடன் இயங்கும்.
3) A யானது உடனடியாக ஓய்வுக்கு வர மற்றைய எல்லாம் V/4 கதியுடன் இயங்கும்.
4) A யானது ஓய்வுக்கு வர E ஆனது V/2 கதியுடன் இயங்கும்.
5) A,B,C,D,E எல்லாம் V/5 என்னும் ஒரே கதியுடன் இயங்கும்.

23) கருவொன்றை நோக்கி புரோத்தன் ஒன்று எறியப்படுகிறது. அதன் பாதையாக இருக்க முடியாதது.




1) 1  2) 2  3) 3
4) 4  5) 5


24) ஓர் மூடிய கொள்கலன் ஒன்றினுள் 1mol ஒட்சிசனும் 4mol ஐதரசனும் உள்ளன. ஒட்சிசன், ஐதரசன் என்பவற்றின் மூலர்த்திணிவுகள் 32,2 ஆகும். ஆயின் $\frac{\text{ஒட்சிசனின் வர்க்க இடைமூலவேகம்}}{\text{ஐதரசனின் வர்க்க இடைமூலவேகம்}}$ எனும் விகிதம் தருவது

1) 16  2) 4  3) 2  4) 1/4  5) 1/16

25) பார்வைக் குறைபாடுடைய நபர் ஒருவரின் அண்மைப்புள்ளி 40cm. 30cm தூரத்திலுள்ள பொருளை பார்ப்பதற்கு அவர் அணியும் வில்லையின் வகையும், புதிய பார்வை வீச்சும்.

| | வகை | வீச்சு |
|---|---|---|
| 1) | குவிவுவில்லை | 40cm தொடக்கம் முடிவிலி |
| 2) | குழிவுவில்லை | 40cm தொடக்கம் முடிவிலி |
| 3) | குவிவுவில்லை | 60cm தொடக்கம் 30cmவரை |
| 4) | குழிவுவில்லை | 60cm தொடக்கம் 30cmவரை |
| 5) | குவிவுவில்லை | 120cm தொடக்கம் 30cm வரை |


26) அருகே காட்டப்பட்ட உருக்களானது அலை ஒன்றின் இடப்பெயர்ச்சி தூர வரைபை உரு (a) யும் இடப்பெயர்ச்சி நேர வரைபை உரு (b) யும் வகைக்குறிக்கின்றன. எனின் இவ்வலையின் கதி.





1) $2cm^{s-1}$  2) $4cm^{s-1}$  3) $6cm^{s-1}$
4) $5cm^{s-1}$  5) $10cm^{s-1}$

27) A,B என்னும் இரு மின்குமிழ்களும் ஓர் ஆளி S உம் படத்தில் காட்டியவாறு கம்பியனால் இணைக்கப்பட்டுள்ளது. வட்டத்தளத்திற்கு உள்நோக்கி அதிகரிக்கும் காந்தப்புலம் படத்தில் காட்டியவாறு பிரயோகிக்கப்படுகின்றது. அப்போது மின்குமிழ்கள் ஒளிருகின்றன. தற்போது ஆளி S மூடப்படுகின்றது. தடத்திலுள்ள மின்னோட்டத்தின் திசையும் மின்குமிழின் ஒளிர்வு பற்றிய கூற்றுக்களில் சரியானது.

| | S ஆனது மூடப்பட முன் மின்னோட்டம் | S ஆனது மூடப்பட மின்னோட்டம் A | B |
|---|---|---|---|
| 1) | மணிக்கூட்டுத்திசை | ஒளிரும் | ஒளிரும் |
| 2) | மணிக்கூட்டுக்கு எதிர்த்திசை | ஒளிராது | ஒளிரும் |
| 3) | மணிக்கூட்டுத்திசை | ஒளிராது | ஒளிராது |
| 4) | மணிக்கூட்டுஎதிர்த்திசை | ஒளிரும் | ஒளிராது |
| 5) | மணிக்கூட்டுத்திசை | ஒளிராது | ஒளிராது |




28) புள்ளி ஏற்றம் +9 ஆனது கடத்தி பொன்கோலத்தினுள் நிறுத்தப்பட்டுள்ளது. பின் வரும் உருக்களில் மின்விசைக் கோடுகளை சரியாகக் காட்டுவது.




29) X.Yஎன்னும் இரு குமிழ்கள் முறையே 2V.V என்னும் கனவளவுகளை உடையவை. குமிழ் X இன் வெப்பநிலை 200K இலும் Yஇன் வெப்பநிலை 400K இலும்பேணப்படுகின்றது. X இல் உள்ள வாயுவின் திணிவு m ஆயின் Yயிலுள்ள வாயுவின் திணிவு





1) m/8  2) m/6  3) m/4
4) m/2  5) m

30) குவிவுவில்லை ஒன்றினால் உருவாக்கப்படும் பொருள் O வின் விம்பம் I ஆகும் படத்தில் காட்டியவாறு வில்லையானது மூன்று சம பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு படத்தில் காட்டியவாறு வைக்கப்படும்போது தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கை.




1) 1  2) 2  3) 1
4) 4  5) 4 இற்கு மேல்

31) காட்டப்பட்ட இலக்கச் சுற்றில் பெய்ப்புக்கள் X,Y இற்கு ஒத்த பயப்பு Z சரியாக இருப்பது.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| X | 1 | 0 | 1 | 0 | 0 |
| Y | 0 | 1 | 1 | 1 | 0 |
| Z | 1 | 0 | 0 | 1 | 1 |
| | 1) | 2) | 3) | 4) | 5) |


32) காட்டப்பட்ட மின்கற்றில் கலங்களினதும் அம்பியர்மானிகளினதும் அகத்தடைகள் புறக்கணிக்கத்தக்கவை ஆயின் $A_1, A_2$ என்னும் அம்பியர்மானிகளின் வாசிப்புகளை சரியாக தருவது.





| | $A_1$ | $A_2$ |
|---|---|---|
| 1) | 1.4 A | 1.4A |
| 2) | 1.4 A | 2.0A |
| 3) | 0.5 A | 2.0A |
| 4) | 2.9 A | 1.0A |
| 5) | 3.0 A | 4.0A |

33) ஒரு முனை மூடப்பட்ட குழாய் ஒன்றின் அதிரும் வளித்துணிக்கைகள் அடிப்படை அதிர்வெண் 200Hz ஆகும். பின்னர் இக்குழாய் சர்வசமனான இரு துண்டுகளாக படத்தில் காட்டியவாறு பிரிக்கப்படின் குழாய்கள் A யிலும், B யிலும் உருவாகும் அடிப்படை அதிர்வெண்கள் முறையே.

1) 200Hz,400Hz  2) 400Hz,800Hz  3) 400Hz,200Hz
4) 800Hz,400Hz  5) 200Hz,800Hz




34) படிகூட்டுநிலைமாற்றி ஒன்றில் சுற்றுக்களின் எண்ணிக்கைகளின் விகிதம் 1:5 தடைகள் காரணமாக ஏற்பட்ட வெப்ப சக்தி இழப்பு 4W ஆகும். முதற் சுற்றில் அழுத்தமும் மின்னோட்டமும் முறையே 10V உம் 2A உம் ஆகும். துணைச்சுற்றில் மின்னோட்டம்,





1) 0.1A  2) 0.4A  3) 0.5A
4) 0.6A  5) 0.8A

35) சீரான காந்தப்பாய அடர்த்தி B ஐ உடைய பிரதேசத்தில் ஒரு Ar ஆரையுடைய X என்னும் மின்னோட்டம் I பாயும் கடத்தும் தடம் வைக்கப்பட்டுள்ளது. தடத்தில் உருவாக்கப்படும் இழுவை,





1) BIr  2) 2BIr  3) 2 BI /r
4) BI /2r  5) 2r/BI

36) ஒரே பரிமாணங்களை உடைய X,Y,Z என்னும் மூன்று கம்பிகளில் தொங்கவிடப்படும் சுமையுடன் நீட்சி மாறுபடுவதை வரைபு காட்டுகிறது X,Y.Z என்பன முறையே இருக்கக்கூடியது.





| | X | Y | Z |
|---|---|---|---|
| 1) | கண்ணாடி | செப்பு | இறப்பர் |
| 2) | கண்ணாடி | இறப்பர் | செப்பு |
| 3) | இறப்பர் | கண்ணாடி | செப்பு |
| 4) | செப்பு | கண்ணாடி | இறப்பர் |
| 5) | செப்பு | இறப்பர் | கண்ணாடி |

37) A,B என்னும் ஒரே மைய உலோக ஓடுகளில் கோள ஓடு A யிற்கு +Q ஏற்றம் கொடுக்கப்பட்டு B யானது புவிக்கு இணைக்கப்பட்டுள்ளது.
1) Aயிலும் Bயிலும் மின்புலச் செறிவுகள் சமனாகும்.
2) Aயிற்கும் Bயிற்கும் இடையில் மாத்திரம் மின்புலச் செறிவு காணப்படும்
3) Bயிற்கு வெளியே மாத்திரம் மின்புலச்செறிவு காணப்படும்.
4) Aயின் உள்ளே வெளியிட்ட மின் அழுத்தம் சமனாகும்
5) B யானது புவிக்கு இணைக்கப்படாது இருப்பின் மாத்திரம் Bயிற்கு வெளியே மாத்திரம் மின்புலச் செறிவு இருக்கும்.




38) காட்டப்பட்ட அழுத்தமானிச் சுற்றில் உள்ள மின்கலங்கள் எல்லாம் புறக்கணித்தக்க அகத்தடையை உடையவை. $E_2 > E_1$ ஆயின் சமநிலைப்புள்ளியை பெறுவதற்கு.
1) $E_2$ வுடன் தொடராக தடை ஒன்றை இணைத்தல் மூலம்
2) $E_1$ உடன் தொடராக தடை ஒன்றை இணைத்தல் மூலம்
3) கம்பி AB ஐ அகற்றி அதற்குப்பதிலாக உயர் தடையுடைய கம்பியை பயன்படுத்தல்.
4) $E_2$ விற்கு சமாந்தரமாக ஏற்றதடை ஒன்றை இணைத்தல்
5) $E_2$ இற்கு சமாந்தரமாக ஏற்றதடை ஒன்றை இணைத்தல்




39) X,Y என்னும் புள்ளிகள் புவிமேற்பரப்பிலிருந்து முறையே r,2r தூரங்களில் உள்ளன. புள்ளி X இல் ஈர்ப்பு அழுத்தம் $-8\ J\ kg^{-1}$. X இல் இருந்து Y யிற்கு 2kg திணிவை கொண்டு செல்வதில் செய்யப்பட்ட வேலை


1) -8kJ
2) -4kJ
3) +4kJ
4) +8kJ
5) +16kJ



40) A,Bஎன்பன செப்புக்குழாய்களாகும். Aயானது குளிர் நீரையும் Bயானது சுடு நீரையும் காவுகின்றன. ஒரு கல்வனோமானி ஒன்று படத்தில் காட்டியவாறு இரு உலோகக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. எவ் உருவமைப்பில் கல்வனோமானி பூச்சிய வாசிப்பை காட்டாது.




41) 24V அழுத்த வழங்கியில் ஓர் நேரோட்ட மோட்டார் செயற்படுகின்றது. அது செயற்படும் போது 1.0 A மின்னோட்டத்தை உறிஞ்சுகின்றது. ஆமேச்சரின் தடை 2 Ω ஆயின் மோட்டாரின் பொறிமுறை வலு.




1) 288 W  2) 26W  3) 24W
4) 22 W  5) 2W

(தொடரும்)

# சார்க் நாடுகளின் வலையமைப்பில் இளைஞர் - யுவதிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே ஜனாதிபதியின் விருப்பம்

## இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் விரித்தமுல்ல

(கொழும்பு)

சார்க் நாடுகளின் தலைவர்கள் கூடுகின்ற இந்த சந்தர்ப்பத்தில் உறுப்பு நாடுகளின் சார்பில் இளைஞர் யுவதிகளையும் இணைத்துக் கொண்டு அவர்களது அபிலாஷைகளையும் நிறைவேற்றி வைப்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விருப்ப மாகும். சார்க் இளைஞர் - யுவதிகளுக்கான இரண்டாவது பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்வோர் இன்னும் சில வருடங்களில் சார்க் நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக வர வேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் ஆவலாய் இருக்கிறது என்று இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ். விரித்தமுல்ல தெரிவித்தார்.

சார்க் நாடுகளின் இளைஞர் -யுவதிகளுக்கான 4 நாள் பயிற்சிப்பட்டறை மஹரகமையில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ். விரித்த முல்ல கலந்துகொண்டார். இதன் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் பேசிய போதே செயலாளர் மேற்கண்ட கருத்தை முன் வைத்தார்.

அவர் இங்கு மேலும் கூறியதாவது,

இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் 15ஆவது சார்க் மாநாட்டில் அதன் தலைவர்கள் கலந்துகொள்கின்ற இவ் வேளையில் அந் நாடுகளின் இளைஞர்-யுவதிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்பதும் ஒரே சமயத்தில் அவர்களது அபிலாஷைகளுக்கும் ஆதரவு வழங்கவேண்டும் என்பது ஜனாதிபதியின் பேராவாவாக இருக்கின்றது.

இந்தப் பயிற்சிப்பட்டறையை திட்டமிட்ட வகையில் செயற்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சு பாரிய ஒத்துழைப்பை நல்கியிருக்கின்றது.

சார்க் நாடுகளின் இளைஞர்-யுவதிகளுக்கான பயிற்சிப்பட்டறை இந் நாடுகளின் அபிவிருத்தியில் முக்கிய பங்குகளை வகிக்கின்றது. தலைவர்கள் ஒன்றிணைந்துள்ள ஒரே சமயத்தில் இளைஞர்களும் ஒன்றுகூடியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

இதன்மூலம் நாடுகளுக்கிடையிலான உறவுகள் பலப்படுத்தப்படுவதுடன் புரிந்துணர்வுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இதில் முக்கிய விடயமாக இளைஞர்-யுவதிகளிடையே நாட்டைக் குறித்த புதிய சிந்தனைகள் உருவாகின்றன.

இன்றைய பயிற்சிப்பட்டறையில் இந்தியாவிலிருந்து 07,பூட்டானிலிருந்து 07, பங்களாதேஷிலிருந்து 12,மாலைதீவிலிருந்து 04, நேபாளத்திலிருந்து 05, பாகிஸ்தானிலிருந்து 10, இலங்கை சார்பாக 14 என மொத்தமாக 59 இளைஞர்-யுவதிகள் கலந்துகொண்டுள்ளனர். ஆப்கானிஸ்தானி லிருந்து எவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்த இளைஞர்- யுவதிகள் எதிர்காலங்களில் தமது நாடுகளின் சார்க் பிரதிநிதியாக அங்கம் வகிப்பார்கள் என்பதும் அவர்கள் அந் நிலைக்கு உயரவேண்டும் எனவும் இலங்கை அரசாங்கததின் நோக்கமாகும். அதுவே எமது நாட்டுக்கு கௌரவமும்.

(அ-6)

# மூதூர் படுகொலை தொடர்பாக பிரான்ஸ் நீதிபதி விசாரணை

(கொழும்பு)

மூதூர் படுகொலையை விசாரணை செய்வதற்கு பிரான்ஸ் அரசு நீதிபதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் ஊடகத்துறை அதிகாரி லூசிலி குறோஸ்ஜுன் தெரிவித்துள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பகுதியில் 2006ஆம் ஆண்டு பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த பணியாளர்கள் மீதான படுகொலைகளை விசாரணை செய்வதற்கு பிரான்ஸ் அரசு நீதிபதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

ஜுலை மாதம் தொடக்க காலப்பகுதியில் இலங்கை சென்றடைந்த நீதிபதி அங்கு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். இங்கு மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பான அறிக்கையை அவர் பிரான்ஸ் அரசிற்கு எதிர்வரும் மாதம் சமர்ப்பிக்கவுள்ளார்.

நீதிபதி பிரான்ஸ் திரும்பிய பின்னர் பிரான்ஸ் அரசு இது தொடர்பில் தனது கூட்டணி நாடுகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளதுடன் இந்த கலந்துரையாடல்களின் பின்னர் படுகொலை தொடர்பான அனைத்துலக விசாரணைகள் தேவையா என்பது தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

பிரான்ஸ் அரசும் பட்டினிக்கு எதிரான அமைப்பும் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நீதிபதியின் அறிக்கையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். மூதூர் படுகொலைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுப்பதாக பிரான்ஸ் அரசு எமது அமைப்புக்கு உறுதி அளித்துள்ளது என்றார்.

இதனிடையே பிரான்ஸ் நாட்டு நீதிபதி மூதூர் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதை இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகமும் உறுதிப்படுத்தியுள்ளது.

(அ)

# தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு தென்பகுதி செல்ல அனுமதி மறுப்பு

## மதவாச்சியில் திருப்பி அனுப்பப்படும் அவலம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தென்பகுதிக்குச் செல்வதற்கு மதவாச்சி சோதனைச்சாவடியில் அனுமதி மறுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணமாக பாஸ்போட், வாகனங்களைச் செலுத்துவதற்குத் தகுதி பெற்றதை உறுதிப்படுத்துகின்ற லைசன்ஸ், நிறுவனங்களில் பணி செய்பவர்களாக இருந்தால்,அதனை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்ற அடையாள அட்டை போன்றவற்றைக் காண்பித்துவிட்டு பலரும் மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாகப் பிரயாணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள், தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வேறு ஆவணங்களை வைத்திருந்தாலும், மதவாச்சி சோதனைசாவடியில் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தேசிய அடை யாள அட்டை இல்லாதவர்கள் மதவாச்சி சோதனைச்சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்படுவதால் மக்கள் தென்பகுதி செல்ல முடியாத அவலப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

(அ-6)


**மாநகர சபை யாழ்ப்பாணம்**

**சுத்திகரிப்பு வேலைகளுக்கு தேவையான பெரிய நார்க்கடகங்கள் விநியோகம் செய்வதற்கான கூறுவிலை அறிவித்தல்**

எமது சபையின் சுத்திகரிப்பு வேலைக்குத் தேவையான 11/4 உயரம் 2 1/2 விட்டம் கொண்ட பெரிய நார்க்கடகம் தேவையாக உள்ளது. இதனை செய்து வழங்குபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. (படிப்படியாக அவற்றினை வழங்கலாம்)

மேற்படி அளவினதான கடகம் ஒன்றின் விலையைக் குறிப்பிட்டு எதிர்வரும் 2008.08.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இடதுபக்க மேல் மூலையில் "நார்க்கடகத்திற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.


*மு.செ.சரவணபவ,*
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*மாநகரசபை, யாழ்ப்பாணம்,*
*29.07.2008*

(சி/1375)


# சினிமாவில் நடிப்பது இஸ்லாத்துக்கு விரோதம் இந்தி நடிகர்களுக்கு கொலை மிரட்டல்

சினிமாவில் நடிப்பது இஸ்லாத்துக்கு விரோதமானது என்பதால் நடிப்பதை நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்து ஷாருக்கான், சல்மான்கான், அமீர்கான் போன்ற முன்னணி இந்தி நடிகர்களுக்கு மின்னஞ்சல் முலம் தீவிரவாதிகள் சிலர் கொலை மிரட்டல் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



மேலும் இந்தி சினிமா நடிகர்கள் சிலரையும் சிலதொழில்அதிபர்களையும் கொலை செய்வோம் என்று தீவிரவாதிகள் தொலைக்காட்சி ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பியுள்ளதால் இந்தி சினிமா பட உலகில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து சில முக்கிய நடிகர்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் இது குறித்து மும்பை தீவிரவாத தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி ஹேமந்த் கார்க்ரே கூறுகையில்,

இந்தி நடிகர்களுக்கு தீவிரவாதிகள் விடுத்துள்ள மிரட்டல் பற்றி எதுவும் தெரிய வில்லை. இது தொடர்பாக தங்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி எந்த இந்தி நடிகரும் எங்களை அணுகவில்லை. இத் தகவல் குறித்து தீவிரமாக விசாரித்து வருகிறோம் என்றார். (அ-6)

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

Botanical Name - Mentha arvensis
Family - Labiatae
Engl- Marsh mint
Sinh - odutalan

இது அதிக தூரம் படர்ந்து வளராத ஓர் வகைச் செட்டி. கணுக்களில் வேர்கள் தோன்றி மண்ணைப் பற்றிக் கொள்ளும். இது பூமியில் நெடுகிலும், கிழங்கு போன்ற வேரை விட்டுக் கொண்டு படர்ந்து செல்லும். சில வெண்மையாகவும், சில சிவப்பாகவும், 3,4 மி.மீ கனமுள்ளதாகவுமிருக்கும். இதன் இலைகள் 2 முதல் 3.5 செ.மீ நீளமும், 1முதல் 2செ. மீ அகலமும் உள்ளதையும், ஓரம் இரம்ப வாய் போன்ற அமைப்பையும் உடையதாய் இருக்கும். இலையில் நரம்புகள் ஓடி இருக்குமிடமெல்லாம் மேல் புறத்தில் பள்ளமாகவும், அடிப்புறத்தில் மேடாகவும் அமைந்திருக்கும்.

**கிடைக்குமிடமும், பயிரிடுதலும்.**

மிதமான சீதோஷ்ண இடங்களில் எங்கும் தானாக முளைத்திருக்கும். வெப்ப நாடுகளில் மலைப்பிரதேசங்களில் தானாக வளரும். ஈரநிலமும், சிறிது நிழலும் அனுகூலமானது. நிழலில் அதிகம் செழித்து வளரும்.

கிழங்குகளை ஒடித்தெடுத்தும், கொடிகளை நட்டும் விதைகளைத் தூவியும் பயிரிடலாம். ஐப்பசி மாதம் நடலாம். 45 நாட்களில் இலைகளை பறித்தெடுக்கலாம். ஒரு முறை நட்டசெடியிலிருந்து 3 ஆண்டுகள் வரை பயன் எடுக்கலாம். வீட்டுத் தோட்டங்களில் நாம் இதனை பயிரிட்டு வளர்க்கலாம்.

யாழ்மாவட்டத்தில் சித்தமருத்துவத்துறை கைதடி, திருநெல்வேலி, விவசாயப் பண்ணை போன்ற இடங்களில் அடையாளப் படுத்துவதற்காக பயிரிடப்பட்டுள்ளது. ஓர் சில விவசாயிகள் பயிரிட்டு வளர்க்கிறார்கள். புதினாவின் பயன்களை அறியாமையே அவற்றை பயிரிட்டு, சந்தைப்படுத்தாமைக்குரிய முக்கியகாரணமாகும்.



**மருந்துச் சத்துக்கள்.**

100 கிராம் புதினா இலையில்,புதரம் 4. 8 கொழுப்பு 0. 6,நார்ப்பொருள் 2. 0, மாச்சத்து 5. 8, கல்சியம் 200 மி.கி, விட்டமின் 'C' 27 மி.கி., ஒக்ஸாலிக்கமிலம் 33 மி.கி, பொஸ்பரஸ் 4 மி.கி,போலிக்கமிலம் 114 மைக்கிரோகிராம்

**மருத்துவப் பண்புகள்:**

1) புதினா இலைகளுடன், புளி, உப்பு, மிளகாய் ஆகியவற்றை அளவாகச் சேர்த்து அரைத்து துவையல் தயாரித்து சோற்றில் பிசைந்து உண்ண நல்ல பசி உண்டாகும். சிறுநீர் நன்கு கழியும்

2) புதினாக்கீரை, உளுத்தம்பருப்பு, பொட்டுக்கடலை,புளி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்தரைத்து, சிறிதளவு வாயில் போட்டு தண்ணீர் குடிக்க குமட்டல்,வாந்தி குணமாகும்.

3) புதினாக்கீரையுடன், சிறிதளவு இஞ்சி, கொஞ்சம்மிளகு, அளவாகப் பனைவெல்லம் சேர்த்து தண்ணீர் கூட்டி அடுப்பில் வைத்து சுண்டக்காய்ச்சிய குடிநீரை பருக வாந்தி வயிற் றுப்பெருமல் பசியின்மை தீரும.

4.புதினாக்கீரையை உலர்த்தி பொடித்து தேனில் குழைத்து உட்கொள்ள மாத்விடாய் தாமதமாகாமல் ஒழுங்காகும். இத் தூளைக் கொண்டு பல்துலக்கினால் பற்கள் வெண்மையடையும்.

5) புதினாக்கீரைப் பொடியையும், திப்பிலித் தூளையும் சமபாகம் எடுத்து தேனில் குழைத்து நாக்கில் தடவ விக்கல் நிற்கும்.

6) கால் எரிச்சலுக்கு இக்கீரையுடன் உப்பைக் கலந்து ஒத்தடம் கொடுக்கலாம்.

7) இலைகளை சிறிதளவு நீர்சேர்த்து அரைத்து பாக்களவு உண்ண வயிற்றுப்புண் ஆறும். வயிற்றுப்புண்ணிற்கு இக்கீரை சிறந்த மருந்தாகும். இக் கீரையிலிருந்து வாசனை எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது.


டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

பல சமயங்களில் முப்பத்திரண்டு பற்களும் சேர்ந்து நாக்கை அடக்க முடிவதில்லை.

- கங்கேரி

வலம்புரி

# சமாதானத்திற்கான போரும் அரசியல் தீர்வுக்கான யுத்தமும்

அரசியல் தீர்வுக்காகவே இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சிங்கப்பூரில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வைக் காண்பதற்காக இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகப் பேராசிரியர் பீரிஸ் கூறியிருப்பதானது, அதிசயமான - ஆச்சரியமான விடயமாகும்.

அதாவது பேராசிரியரின் கருத்தை சுருக்கமாகக் கூறுவதாயின், தமிழரைக் கொன்று தமிழருக்கு உரிமை கொடுப்போம் என்பதாகவுள்ளது. அமைச்சர் பீரிஸ் மரியாதைக்குரிய ஒருவர் என்ற கணிப்பு பல தடவைகள் மீறப்பட்டுள்ள போதிலும், இப்போது அரசியல் தீர்வு காண்பதற்காகவே இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்னும் அவரின் கருத்து அவரின் சுய அறிவு தொடர்பிலான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு மேலாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் காலத்திற்குக் காலம் ஆட்சிக்கு வருவோர் கூறிக் கொள்ளும் ஆற்றுப்படுத்தல் மொழியாகவும் பேராசிரியர் பீரிஸின் கருத்தைக் கணித்துக் கொள்ள முடியும்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது சமாதானத்திற்கான யுத்தம் என்று கூறினார். உலக நாடுகளுக்கு விஜயம் செய்த அவர், அங்கெல்லாம் சமாதானத்திற்கான யுத்தம் என்பதையே உச்சாடனம் செய்தார்.

அதனை உலக நாடுகளும் வித்தியாசமான எண்ணக்கரு - அணுகுமுறை என ஏற்றுக் கொண்டன. ஆனால் சந்திரிகா அம்மையாரின் சமாதானத்திற்கான யுத்தமே மனிதப் புதைகுழிக் கலாசாரத்தைத் தோற்றுவித்தது.

எத்தனையோ பெண்கள் விதவைகள் ஆனார்கள். இன்றுவரை காணாமல் போனோரின் பட்டியல் பார்வைக்காகவுள்ளது. இதுவே அவரின் சமாதானத்திற்கான யுத்தமாயிற்று.

இப்போது அந்த அம்மையார் செல்லாக் காசாகி விட்டார். அவரின் குடியுரிமையைப் பறித்து அவரை நாட்டை விட்டுத் துரத்தும் நடவடிக்கை முனைப்புப் பெற்றிருப்பதானது வேறு கதை.

இந் நிலையில் தற்போதைய அரசு அரசியல் தீர்வுக்கான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்கின்றது. இதன் விளைவு எப்படி அமையும் என்பதை மிக விரைவில் உலகம் பார்க்கலாம்.

ஆனால் சமாதானத்திற்காக யுத்தம் நடத்துவதும் அரசியல் தீர்வுக்காக இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதும் என்பது ஒருபோதும் சாத்திய மற்றது.

இந்த ஒற்றுமையற்ற பதங்களை இணைத்துப் பேசி மக்களை ஏமாற்றாதீர்கள் என்பதே எமது தாழ்மையான வேண்டுதல்.

# சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்துவதால் பெறப்படும் நன்மைகளை விளக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்தி அதன் மூலம் பெற்றுக்கொள்ள விருக்கும் நன்மைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சார்க் மாநாடு முடிவடைந்த பின்னர் கூட்டறிக்கையை விடுக்காமல் இந்த சார்க் மாநாட்டால் இலங்கைக்கு ஏற்படப் போகும் நன்மைகளை ஒவ்வொன்றாக ஜனாதிபதி விபரிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறினார். மாலைதீவில் நடைபெற விருந்த 15ஆவது சார்க் மாநாட்டை தடுத்து நிறுத்தி இலங்கையில் நடத்த வேண்டிய அவசியத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் எனவும் மக்கள் போதியளவு உணவின்றி கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்து சார்க் மாநாடு நடத்தப் படுவதற்கான தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் இன்று 500 சார்க் பிரதிநிதிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா செலவில் விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருப்பதாகவும், இதனை விட இந்த விருந்து பசாரத்திற்கான நடனம் உள்ளிட்ட களியாட்டங்களுக்கு 25 மில்லியன் ரூபா செலவிடப்பட இருப்பதாகவும் லக்ஷ்மன் கிரியல்ல குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்க் பிரதிநிதி களுக்கு நடத்தவிருக்கும் விருந்து பசாரத்துக்கு பெருந்தொகை பணம் செலவிடப்படவிருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.



உயிருடன் இருப்பவர்கள் வயிற்றில் இருக்கும் குழந்தைகள் உட்பட அனைத்திற்கும் ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியுள்ளபோதும் அவரால் வழங்கப்பட்ட எந்த உறுதிமொழிகளும் முழுமையாக நிறைவேற்றப்பட வில்லையெனவும் கிரியல்ல தெரிவித்தார்.

அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ஆடைஏற்றுமதி, வரிச் சலுகையை மேலும் நீடிப்பதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் அதனை இழப்பதற்கான சந்தர்ப்பங்களே அதிகரித்துச் செல்வதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறினார். இந்த அரசாங்கம் தொடர்ந்தும் ஆறு மாதங்கள் ஒருவருடத்திற்கு நீடித்தால் பலர் தொழில்களை இழக்கவேண்டிய நிலையே ஏற்படும் எனவும் ஐக்கிய் தேசி யக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல மேலும் கூறினார். (அ)


குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா -02.08.2008

மனித குருதிக்கு மாற்றீடு மனித குருதியே



இரத்ததானம் பயனுடையது

குருதி வழங்குநரின்
உடலின்நிறைகுருதிச்செறிவு அறியப்படுகின்றது.
உடல் நிலை (நாடித்துடிப்பு , குருதியமுக்கம்) சோதிக்கப்படுகின்றது.
குருதி வகை அறியப்படுகின்றது.
குடும்ப அங்கத்தவர்கள் ,நண்பர்களின் குருதித் தேவைக்கு உதவ முடிகின்றது.
வைத்திய சாலையினுடான உறவு நெருக்கமாகின்றது. ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது.
குடும்ப ,சமூகப்பொறுப்புணர்வு அதிகரிக்கின்றது.

இரத்தவங்கி,
போதனா வைத்தியசாலை ,

தொ.பே. 021 222

3063


# கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரைகள் 11ஆம் திகதி ஆரம்பம்

## விடுதி மாணவர்களை 10ஆம் திகதிக்கு முன் சமுகமளிக்க கோரிக்கை


(கொழும்பு)

கிழக்குபல்கலைக்கழகத்தின் 2007 / 2008ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஆரம்கமாகவுள்ளன கலை கலா சாரப் பீடம்,விவசாய பீடம், வர்த்த முகா மைத்துவபீடம், விஞ்ஞானபீடம் என்பவற்றின் விரிவுரைகள் வந்தாறு மூலை செங் கலடியில் ஆரம்பமாகும். விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் ஓகட்ஸ் மாதம் 10 ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் சமூகமளிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

சௌக்கிய பராமரிப்பு பீடத்தில் வைத்திய மற்றும் தாதியர் பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பாட நெறிகள் 11 ஆம் திகதி இலக்கம் 50, புதிய வீதி, மட்டக்களப்பிலுள்ள பீடத்தில் ஆரம்பமாகும். விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் 10 ஆம் திகதி மாலை 6மணிக்கு முன்னர் இல 404, பார்வீதி, மட்டக்களப்பிலுள்ள விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறு கோரப் பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக் குமாணவர்கள் தத்தமது பீடாதிபதிகளு டனோ அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / பரீட்சைகள் தொலையபேசி இலக்கம் 065-2240584அல்லது மின்னஞ்சல் examinations @esn.ac.lk உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விப ரங்களை பல்கலைக்கழக இணையத் தளம் www.esn.ac.lk னுள் பிரவேசிப் பதன் மூலம் அறிந்துகொள்ள முடியும். (அ)

# அன்பே இறைவன் - பகவான் பாபா



“அன்பே இறைவன் அன்பினில் வாழ நாம் என்ன செய்யவேண்டும்? நமது இதயத்தை அன்பால் நிரப்பிக்கொள்ள் வேண்டும். அன்பு இருக்கும் போது துன்பம் என்பதற்கு இடமில்லை. துன்பம் இருந்தால் அங்கு அன்பு இல்லை என்று அர்த்தமாகும். அன்பு எல்லையற்றதாக இருக்கவேண்டும். உங்களிடம் அன்பு மட்டுமிருந்தால் நீங்கள் எதையும் சாதிக்கலாம். அன்பினை விடவும் சிறந்த செல்வம் வேறில்லை. நீங்கள் எவரிடமும் எதையும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அன்பே அனைத்தையும் வழங்கும் .எதிலுமே குறைபாடு இருக்காது. நேர் வழியில் அன்பை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். பொய்யான விடயத்திற்கோ நடுநிலையற்ற தன்மைக்ககோ இடம் கொடாது சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்” என்கிறார் பகவான் பாபா.

சத்யம் ,தர்மம், பிரேமை, சாந்தி இவை மனிதனுக்கான நான்கு தாய்மார்கள். மனிதன் இந் நான்கு தாயையும் திருப்தி செய்து வாழ வேண்டும். ஆனால் மனிதன் இப்புனிதமான தாய் மார்களை விடுத்து இதற்கு எதிரான தாய்மார்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்டான். அநியாயம், அக்கிரமம், அதர்மம், அசத்யம் இவைகளை தாய்மார்களாக தத்தெடுத்ததால் இன்று மனிதன் பல துன்பங் களை அனுபவிக்கின்றான்.

கோபம், பொறாமை, வெறுப்பு இம் மூன்றும் மனிதனுக்கு நஞ்சானவை. மனித மனம் நஞ்சாகிவிட்டது. நஞ்சாகி விட்டதால் நமது செயல்களும் நஞ்சாகிவிட்டன. இவ் நஞ்சு விலக வேண்டுமானால் இதயத்தை முழு அன்பினால் நிரப்ப வேண்டும். மனிதன் தெய்வீகத்தை அடைவதற்கு மனித தன்மையை கடந்திருக்க வேண்டும். மனிதன் தெய்வீகத்தை அடைவதற்கு மனித தன்மையை கடந்திருக்க வேண்டும் என சிலர் எண்ணுகிறார்கள். இது உண்மையல்ல. அன்புமனிதனின் ஆளுமைக்குட்பட்டது. ஆனால் நாம் தான் அன்பை தவறான வழியில் செலுத்தி தவறான கருமங்களை செய்கின்றோம். அது தவறு. அன்பு மேலிலில்லை எம் மீது தான்.

கோபத்தை அன்பாக மாற்றிக்கொள்ள வேண்டும். வெறுப்பை அன்பாக்கிக்கொள்ளவேண்டும். இவற்றை அன்பாக்கிக்கொள்ள இதயம் அன்பால் நிலைத்திருக்கவேண்டும். இயேசு பிரான் அன்பையே பிரதானமாக கருதினார். அன்பை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அன்பை எல்லோரிடத்திலும் பெற்றுக்கொள்ளவேண்டும். இதுவே இயேசு பிரானின் உபதேசம். இதனை பகவான் பாபாவும் உலகத்தில் உள்ள ஒரே மொழி அன்பு, ஒரே மதம் அன்பு; ஒரே இறைவன் அன்பு என்கிறார் .

ஜெய்சாயிராம் யாதவன்.

உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

இதோ! அரிய சந்தர்ப்பம் உங்கள் கணக்கு மீதி இரட்டிப்பு



அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-
இரண்டாம் இடம் ரூபா 7,500/-
மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு, உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/-க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள். அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு


# இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள ரெலிமெடிசின் உடன்படிக்கை மூலம் சுகாதார துறையும் தாரைவார்க்கப்படும்

## டாக்டர்கள் பாதிக்கப்படுவர் எனவும் ஜே.வி.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடவுள்ள "ரெலிமெடிசின்" உடன்படிக்கை மூலம் எம் நாட்டிலுள்ள 11 ஆயிரத்து 500டாக்டர்கள் பாதிக்கப்படுவார்கள். அதனால் சுகாதாரத்துறையும் இந்தியாவுக்கு தாரைவார்க்கப்படும் ஆபத்தும் தோன்றியுள்ளது என்று ஜே. வி.பி. எச்சரிக்கை விடுக்கின்றது. கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே ஜே. வி. பி.யின் மத்திய குழு உறுப்பினர் டாக்டர் நளிந்த ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, தகவல் தொழில் நுட்ப பரிமாற்றத்தின் மூலம் இந்திய வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளை பெறுவது மட்டுமன்றி இலங்கையில் நோயாளர்களுக்கு நேரடியாக சிகிச்சை வழங்குவது மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதே ரெலிமெடிசின் திட்டமாகும். இதற்காக இடவசதிகள் தேவையான மனித வளங்களை இலங்கை அரசாங்கமே வழங்கும்.

அதற்கான கொடுப்பனவுகளையும் நாமே வழங்க வேண்டும். இதனால் எமது பணம் இந்தியா சென்றடைகிறது. அத்தோடு இலங்கையில் 11ஆயிரத்து 500 டாக்டர்கள் உள்ளனர். இவர்களில் ஆயிரத்து 500 பேர் விசேட நிபுணர்கள். சிறந்த பயிற்சி பெற்றவர்கள். இந்த உடன்படிக்கையால் இவர்களது சேவைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எகிப்திலும் எமது நாட்டிலும் மட்டுமே இரத்த வங்கிகள் சிறப்பாக இயங்குவதாகவும் தொற்றுகாவிகள் அல்லாத உயர் ரக இரத்த வகைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனமே நற்சான்றிதழ் வழங்கியுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இந்திய நிறுவனங்களூடாக தனியார் இரத்த வங்கிகளை இங்கு நிறுவவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் எய்ட்ஸ்நோய் பரவுவதற்கு காரணமாக அமைந்தமை இரத்தப் பரிமாற்றங்களென்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏனெனில் எமது நாட்டைப் போன்று அங்கு இரத்தம் வழங்கு பவர்களின் மாதிரியை பரிசோதித்து தொற்றுக் காவிகள் உள்ளனவா என ஆராயப்படுவதில்லை. எனவே தனியார் இரத்த வங்கிகளை ஆரம்பிப்பது இலங்கையில் எய்ட்ஸ் போன்ற நோய்கள் பரவும் சந்தர்ப்பங்களை அதிகரிக்கும்

இப்போதே இங்கு தனியார் வைத்திய சாலைகளில் ஒரு பைந்இரத்தம் வழங்குவதற்கு ரூபா 50ஆயிரம்கட்டணம்அறவிடப்படுகிறது. ஆனால் ஒரு பைந் இரத்தத்தை அரச இரத்த வங்கியில் ரூபா 250 கொடுத்தே கொள்வனவு செய்யப்படுகிறது.

(அ-6)

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

# முரளி, மெண்டிஸின் பந்து வீச்சுக்கு இந்திய அணி தாக்குப் பிடிக்குமா?



(காலி)

கும்ளே தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது.

3 டெஸ்ட் போட்டித் தொடரில் கொழும்பில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இந்தியா – இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி காலியில் இன்று ஆரம்பமாகின்றது. இந்த டெஸ்ட் போட்டி இந்திய அணிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தொடரை சமன் செய்ய இந்த டெஸ்டில் வெற்றி பெற வேண்டும். மாறாகத் தோல்வியடைந்தால் டெஸ்ட் தொடரை இழந்து விடும். ஆனால் முரளிதரன், மெண்டிஸ் பந்துவீச்சுக்கு இந்தியா தாக்குப்பிடிக்குமா என்பது கேள்விக்குறியே.

இருவரது அபாரமான பந்து வீச்சுக்குக் கொழும்பு டெஸ்டில் இந்திய வீரர்கள் சரணடைந்திருந்தனர். இருவரும் சேர்ந்து 19 விக்கெட்டுக்கள் கைப்பற்றி இலங்கை வெற்றிக்கு மிக முக்கிய பங்கு வகித்தனர்.

காலி ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருக்கும் என்பதால் இருவரும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருவரது பந்து வீச்சை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் கடந்த சில தினங்களாக விவாதித்தனர். கூடுதல் கவனத்துடன் ஆடுமாறு பயிற்சியாளர் கிறிஸ்டன் அறிவுரை வழங்கியுள்ளார்.

முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்குப் பரிகாரம் தேடும் வகையில் இந்திய வீரர்கள் ஆடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய அணியில் பெரும்பாலும் மாற்றம் இருக்காது என்று தெரிகின்றது.

அப்படி ஒருவேளை மாற்றமிருந்தால் புதுமுக வீரர் ஓயா சேர்க்கப்பட்டு ஹர்பஜன் சிங் நீக்கப்படலாம். இலங்கை அணியைப் பொறுத்தவரை பந்து வீச்சில் மட்டுமல்ல துடுப்பாட்டத்திலும் பலம் பொருந்திக் காணப்படுகின்றது.

முதல் டெஸ்டில் 4 வீரர்கள் சதம் அடித்தனர். காலி மைதானம் இலங்கை அணிக்குச் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆட்டம் 4 நாளில் முடியவும் வாய்ப்புள்ளது. (05)

## இங்கிலாந்து சுருண்டது

அன்ரூ நெல், ஜக் கலீஸின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 231 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபுற்றதுடன் இரண்டாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று பேர்மிங்ஹாமில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தா[illegible] இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குக் 76 ஓட்டங்களையும் பெல் 50 ஓட்டங்களையும் மற்றும் பிறின்டொப் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அன்ரூ நெல், ஜக் கலீஸ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் நிறனி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட்டை இழந்து 38 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மக்கன்சி 12, ஹரிஸ் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்ததுடன் சிமித் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் பிளின்டொப் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.(05)

## பாடுமீன் ஏ அணியை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.நீக்லஸ் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதை பந்தாட்ட லீக் நடாத்திய 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதை பந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்லஸ் அணி சம்பியன் ஆனது.

சென்.றொக் மைதானத்தில் நாவாந்துறை சென்.நீக்லஸ் அணியும் குருநகர் பாடுமீன் ஏ அணியும் இறுதிப் போட்டியில் விளையாடின. விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் சென்.நீக்லஸ் அணி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி 5-வது நிமிடத்தில் சென்.நீக்லஸ் அணி வீரர் றெக்ஸ்மன் முதலாவது கோலையடித்தார். தொடர்ந்து 9-வது நிமிடத்தில் அதேயணியைச் சேர்ந்த வீரர் கில்டர் இரண்டாவது கோலையடித்தார்.

தொடர்ந்து இடைவேளை வரை இரு அணியினரும் கடுமையாக முயற்சித்தபோதும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை.

இடைவேளைக்குப் பின்னர் 11-வது நிமிடத்தில் பாடுமீன் ஏ அணியைச் சேர்ந்த வீரர் கஜீதரன் தனது அணிக்காக முதலாவது கோலையடித்தார்.

ஆட்ட நேரம் முடியும் வரை பாடுமீன் வீரர்கள் கடுமையாக முயற்சித்தபோதும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. இவ்விறுதியாட்டத்திற்கு ரி.ஆர்.நித்திலநாயகம், சி.சுரேஸ், எஸ்.ஆனந்தராஜா ஆகியோர் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.



## இங்கிலாந்து கோரிக்கையை ஏற்க இந்தியா மறுப்பு

இந்தியாவில் செப்ரெம்பர் மாதம் நடக்கும் முதலாவது சம்பியன் லீக் இருபது-20 போட்டிக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுத்து வரும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஒக்டோபர் மாதம் சார்ஜாவில் சம்பியன் லீக் கிரிக்கெட் போட்டியை நடத்துகின்றது. இதில் பங்கேற்கும்படி இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிலையில் அவர்களின் அழைப்பை ஏற்க இந்தியக் கிரிக்கெட் சபை மறுத்து விட்டது. (05)

## கனடா இருபது - 20 கிரிக்கெட் தொடர் ரத்து

பாகிஸ்தான், பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள், கனடா ஆகிய 4 நாடுகளிடையே கனடாவின் ரொரன்டோ நகரில் ஓகஸ்ட் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடக்க இருந்த இருபது-20 கிரிக்கெட் போட்டித் தொடர் கைவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதனை உறுதி செய்துள்ளது. ரொரன்டோவில் மைதானம் உள்ளிட்ட வசதிகள் போதுமான வகையில் இல்லை. போட்டி நடைபெறவிருந்த மைதானங்களைப் பார்வையிட்ட மேற்கிந்தியத் தீவுகள் அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிபு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. (05)

## வலம்புரியின் ஒலிம்பிக் உலா

Beijing 2008 — இன்னும் 08 நாள்

## முதல் ஒலிம்பிக் - 1896

நவீன யுகத்தின் முதல் ஒலிம்பிக் போட்டி 1896 இல் கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்றது.கி.பி.393இல் ரோமாபுரி அரசர் முதலாம் தியோடோசியஸ் பண்டைய ஒலிம்பிக்கை ரத்து செய்தார்.

அதன்பின்னர் 1894 ஜுன் 23 இல் பிரான்ஸ் நாட்டின் பாரிஸில் சர்வதேச ஒலிம்பிக் குழு அமைக்கப்பட்டது.

பண்டைய ஒலிம்பிக் கிரீஸிலுள்ள ஒலிம்பியாவில் நடைபெற்றுவந்ததால், இயற்கையாக முதல் ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு கிரீஸுக்கு அளிக்கப்பட்டது.


1896 ஏப்பிரல் 6 முதல் 15 வரை ஏதென்ஸில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியை கிரீஸ் அரசர் முதலாம் ஜோர்ஜ் ஆரம்பித்து வைத்தார்.

14 நாடுகளில் இருந்து 241 வீரர்கள் பங்கேற்றனர். 9 விளையாட்டுகளில் 43 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

மோசமான வானிலை நிலவிவந்த போதிலும், இப்போட்டி மிகப் பெரிய வெற்றியாக அந்த காலகட்டத்தில் கருதப்பட்டது.

அப்போதைய மிக முக்கியமான வீரர்கள் பங்கேற்கா விட்டாலும், அதிகமான நாடுகளிலிருந்து அதிகமான வீரர்கள் பங்கேற்ற மிகப் பெரிய போட்டி என்ற சிறப்பை முதல் போட்டி பெற்றது.

நவீன யுகத்தில் மிகப்பெரிய அரங்காக பனதிநாயகோ அரங்கு மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.மரதன் ஓட்டத்தில் கிரேக்க வீரர் ஸ்பிரிடன் லுயிஸ் வென்று தாயகத்துக்கு பெருமை சேர்த்தார்.



ஜேர்மனியை சேர்ந்த குத்துச்சண்டை வீரரும், ஜிம்னாஸ்டிக் வீரருமான கார்ல்ஷீமன் 4 தங்கம் வென்று அதிக பதக்கம் வென்றவர் என்ற பெருமையை பெற்றார்.

1900இல் ஒலிம்பிக்கை நடத்த கிரீஸ் மற்றும் அமெரிக்கா விரும்பினாலும், ஏற்கனவே பாரிஸில் நடத்துவது என முடிபு செய்யப்பட்டிருந்ததால் கிரீஸுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.அதன் பின்னர் 2004 இல் தான் கிரீஸில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது என்பது வியப்பான உண்மை..

## குழப்பங்களுடன் நடந்த இரண்டாவது ஒலிம்பிக்

இரண்டாவது ஒலிம்பிக் போட்டி 1900 இல் பிரான்ஸ் நாட்டின் பாரிஸில் நடைபெற்றது.

மே 14 முதல் ஒக்டோபர் 28 ஆம் திகதி வரை நடைபெற்ற இப்போட்டி, தொடக்கம் மற்றும் நிறைவுநாள் இல்லாமல் பல குழப்பங்களுடன் முடிபுற்றது.24 நாடுகளைச் சேர்ந்த 997 வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற னர். முதல் முறையாக மகளிர் கலந்து கொண்டனர்.

மொத்தம் 19 விளையாட்டுக்களில் 95 பிரிவுகளில் போட்டிகள்நடத்தப்பட்டன. இப் போட்டியில் வென்ற பெரும்பாலான வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படவில்லை.

அதற்கு பதிலாக கிண்ணங்கள், கேடயங்கள் வழங்கப்பட்டன.ஞாற்றுக்கிழமை போட்டிகள் நடத்துவதற்கு அமெரிக்க வீரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். சில வித்தியாசமான போட்டிகள் இந்த ஆண்டில் மட்டுமே நடத்தப்பட்டன.

குதிரை சவாரியில் நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல், தடைநீச்சல்,இரண்டு நாள் கிரிக்கெட், உயிருள்ள புறாவை சுடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

ஆல்வின் கிராயென்ஸ் லெயின் என்பவர் 60 மீற்றர், 110 மீற்றர், 200 மீற்றர் தடையோட்டம், நீளம் தாண்டுதல் ஆகியவற்றில் தங்க பதக்கம் வென்றார்.

ஒரே போட்டியில் தனி நபர் பிரிவில் 4 தங்கம் வென்ற இவரது சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை.

நீளம் தாண்டுதல் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டதால் மேயர் பிரின்ஸ் டெயின் என்பவரை பங்கேற்க அவரது பல்கலைக்கழகம் அனுமதிக்கவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த பிரின்ஸ் டெயின், போட்டியில் வென்ற கிராயென்ஸ் லெயினின் முகத்தில் அறைந்தார் என்ற குற்றச்சாட்டு அப்போது எழுந்தது.

டென்னிஸ் ஒற்றையர் பட்டத்தை சார்லோட் கூப்பர் கைபற்றினார்.இதன் மூலம் ஒலிபிக்கில் பதக்கம் வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார்.

கூப்பர், கலப்பு இரட்டையர் போட்டியில் தங்கம் வென்றமை குறிபிடத்தக்கது.மரதன் போட்டியில் முதலிடம் பிடித்த பிரெஞ்ச் வீரர்கள் குறுக்கு வழியில் வந்தனர் என அமெரிக்க வீரர்கள் மூவர் குற்றம் சாட்டினர்.

பிரெஞ் வீரர்களின் கால்களில் சேறு இல்லை என்பதை தங்களது வாதத்துக்கு ஆதாரமாக அவர்கள் தெரிவித்தனர்.

**பாலா**

## சட்டவிரோதமாக குடியிருப்...

இதனைத் தெரிவித்தது. குறித்த அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான அசோக டி சில்வா, மலிம் மார்ஷுக் மற்றும் ரி.எ.எக்கநாயக்க முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அந்தப் பகுதியில் குடியிருப்பவர்களை அகற்றுவதற்காக சட்டத்தைப் பயன்படுத்தாது குண்டர்களின் உதவியைப் பெற இடமளிக்க முடியாது என மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் ஜெயசூர்ய தெரிவித்தார்.

கொம்பனித் தெருவில் இருந்து வெளியேற்றப்படும் குடியிருப்பாளர்களுக்கு மாற்று இருப்பிடங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி பாலித ரணசிங்க நீதிமன்றத்தில் அறிவித்தார்.

குடியிருப்பாளர்களுக்கு தெமட்டகொட பகுதியில் குடியிருப்புக்களை வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை உறுதி செய்து அவர்களுக்கான குடியிருப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச தரப்பு சட்டத்தரணிக்கு உயர் நீதிமன்றம் நேற்று ஆலோசனை வழங்கியது.

கொம்பனித்தெரு கிளனி ஒழுங்கை குடியிருப்பாளர் அகற்றப்படுகின்றமைக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை பொலிஸாரிடம் வழங்கிய சட்டத்தரணியை கடத்திச் செல்வதற்காக வெள்ளைவான் குழுவினர் சென்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு விளக்கமளிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (சு-5)

## கிளிநொச்சியிலுள்ள...

உள்ளன.

இதனால் தினம் தினம் அங்குள் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பெருமளவு இடம் பெயர்ந்துள்ள இந்த மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

மருத்துவ வசதிகள், இருப்பிட வசதி ஆகியவை அறவே அற்ற நிலையில் மர நிழல்களில் வாழ்க்கை நடத்தவேண்டிய பரிதாபமான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உதவும் தொண்டு நிறுவனப் பணியாளர்களை இலக்குவைத்து இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு மனிதாபிமான பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கும் வுன்னி மக்களின் பேரவல நிலை கொழும்பு வந்துள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மூலம் வெளியுலகிற்கு தெரியவந்துவிடும் என்ற அச்சத்தினால் வன்னிப் பகுதிக்கான சகல தொடர்புகளையும் அரசு துண்டித்துள்ளது.

வன்னியிலுள்ள வைத்தியசாலைகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வங்கிகள், அரச அலுவலகங்கள் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்பட்ட சுமார் 500 தொலைபேசி இணைப்புக்கள் இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-5)

## இலங்கைத் துணை...

யின் தேசிய செயலாளர் டி.ராஜா, தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண் டியன் மற்றும் அக் கட்சியின் தேசிய கட்டுப் பாட்டுக்குழுத் தலைவர் ஆர்.நல்லகண்ணு ஆகியோர் தலைமையேற்றர்.

முற்றுகைப் போராட்டத்திற்கு பொலிஸார் அனுமதிக்காததால் துணை ஸ்தானிகராலயத்திற்கு அருகே பேராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர்.

இப்போராட்டத்தில் வை.சிவபுண்ணியம், பத்மாவதி, கே.உலகநாதன், ராஜசேகரன் உள்ளிட்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும் துணைச் செயலாளர்களான சி.மகேந்திரன் மற்றும் ஜி.பழனிச்சாமி ஆகியோருடன் ஏராளமான தொண்டர்களும் ஈடுபட்டனர். (சு-5)




## தரம் 5 ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரை

புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு தொடர்பாக, யாழ்.கல்வி வலயத்தில் தரம் ஐந்து வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கோட்ட ரீதியாக இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும் நல்லூர் கோட்ட ஆசிரியர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்குப் புத்தூர் அத்தியர் இந்துக் கல்லூரியி லும் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் ஒரு ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## மன்னார்...

உயர் அதிகாரிகளும் கலந்து

இச்சந்திப்பினைத் தொட

அமைச்சர்களும் மடுத் தேவா

களை பார்வையிட்டுள்ளனர்.

## கரும்புலி.

தாக்குதலில் பயங்கரவாதிகள்

முற்றாக அழிக் கப்பட்டுள்ளது எ

படைப் பேச்சாளர் விங் கொமா

நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தின் மீதா

லின் பின்னர் பாரிய தீப்பிழம்பு

தாக விமானி தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் ஆறுமுகன்...

அலுவலக பிரச்சினை தொடர் பாக 2003 ஆம் ஆண்டு நுவரெலியா நீதி வான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமல் நீதிமன்றத்தை அவமதித்தார்கள் என்று குற்றஞ்சாட்டி, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், மாகாணசபை உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உட்பட ஒன்பது பேருக்கு எதிராக கட்சியிலிருந்து வெளியேறியவரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான எஸ்.சதாசிவம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பை நேற்று முன்தினம் வெளியிட்ட நீதிமன்றம் வழக்கின் எதிரிகளான ஒன்பது பேரில் ஆறு பேரை விடுதலை செய்ததுடன் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உட்பட மூவருக்கு

நீதிமன்றத்தை அவமதித்தார்

குற்றச்சாட்டின் பேரில் ஆறு மாத

வைக்கப்பட்ட சிறைத்தண்டனை

மாதங்கள் சாதாரண சிறைத்தண்

ஆளுக்கு தலா ஆயிரம் ரூபா

விதித்தது.

அமைச்சர் உட்பட மூவருக்

நீதிமன்றம் வழங்கிய இந்த தண்

இலங்கை அரசமைப்பின் 34-வ

கீழ் ஜனாதிபதிக்கு உள்ள சிறப்பு

ளின்படி ஜனாதிபதி மகிந்த ராஜப

துச் செய்து பொது மன்னிப்பு வழ

நேற்று முன்தினம் மதியம் நீ

தீர்ப்பு வழங்க நேற்றுமுன்தினம்

இந்தப் பொது மன்னிப்பு வழங்

ளதாக ஜனாதிபதி அலுவலக வட்

தெரிவித்தன.

## சார்க் மாநாட்டுக்குப்...

ஏமாறுவதற்கு அரசாங்கம் இனியும் தயாரில்லை. புலிகள் உண்மையாகவே பேச்சுவார்த்தைக்கு வருவதாக இருந்தால் முதலில் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பதவிக்காலத்தில் புலிகள் ஒரு சில ஆயுதங்களை கையளித்துவிட்டு சமாதானத்திற்கு வந்தார்கள்.

ஆனால் மீண்டும் காட்டுக்குச் சென்று விட்டார்கள்.ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் அவருடன் போர் நிறுத்த உ

கை ஒன்றை செய்தார்கள். ஆன

ளே 10 ஆயிரம் தடவைகளுக்குமே

உடன்படிக்கையை மீறியுள்ளனர்.

இக்காலப் பகுதிக்குள் 168 புல

துறையினரை புலிகள் கொலை செ

னர். எனவே புலிகளின் போலியா

நிறுத்த அறிவிப்பை நம்பி ஏமாறு

இனியும் அரசாங்கம் தயாராக

என்றும் அமைச்சர் மேலும் தெரிவி

## வெளிமாவட்டங்க...

அரச ஊழியர்கள், சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் தமது கடமையின் நிமிர்த்தம் மற்றும் விசேட தேவைக்காக வெளி மாவட்டங்களிற்கு பயணங்களை மேற்கொள்ளும்போது தமது திணைக்களத்தின் தலைவர் அல்லது நிறைவேற்று அதிகாரியின் அனுமதியுடன் நான்கு நாட்களில் பயண பாதுகாப்பு அனுமதியை (கிளியரன்ஸ்) பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அரசு திணைக்களத் தலைவர்கள், சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தனியார் நிறுவன முகாமையாளர்களை அழைத்து காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் சந்தித்த போதே யாழ்.கட்டளைத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் வெளிமாவட்டங்களிற்குச் செல்வதற்கான பயண பாதுகாப்பு அனுமதியை பெறுவதற்கு, பயணம் மேற்கொள்ளவுள்ள காரணத்தைக் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை திணைக்களத் தலைவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் பயண பாதுகாப்பு அனுமதி (கிளியரன்ஸ்) பெறுவதற்கான விண்ணப்பப் படிவம், தேசிய அடையாள அட்டையின் பிரதி, திணைக்கள அடையாள அட்டையின் பிரதி என்பவற்றிலும் திணைக்களத் தலைவரின் கையொப்பத்தினைப் பெறவேண்டும்.

அவற்றை சிவில் நிர்வாக காரியாலயத்தில் ஒப்படைத்தால் அவர்கள் கொ

தங்கியிருக்கும் முகவரியை உறுதி

நான்கு நாட்களில் பயண பாதுகாப்

தியை படையினர் வழங்குவர்.

இதேபோன்று சர்வதேச அரச

நிறுவன ஊழியர்களும், உள்ளூர்

பற்ற நிறுவன ஊழியர்களும் தமது

னத் தலைவரிடம் கையொப்பம் பெற்

நடைமுறையில் பயணப் பாதுகாப்பு

யைப் பெற முடியும்.

அவசர தேவைகளுக்காக வெ

டங்களுக்கு பயணம் செய்ய வேண்

கள் பயணத்துக்கான காரணத்தை

பிட்டு கோரிக்கை கடிதத்துடன் மற்றும்

யான ஆவணங்களை யாழ்.சிவில்

காரியாலயத்தில் ஒப்படைத்தால் 4

நேரத்தில் பயணப் பாதுகாப்பு அனும

கப்படும் என யாழ்.கட்டளைத் தளபதி

ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உறுதியளி

இதேவேளை பொதுமக்களுக்கா

ணப் பாதுகாப்பு அனுமதி முன்னர்

நடைமுறையிலேயே வழங்கப்படு

நிலையில் அவர்களுக்கான அனு

நாட்களுக்குள் வழங்கப்படும்.

ஒருமுறை பெற்றுக் கொண்ட பயண

காப்பு அனுமதியுடன் 3 மாதங்களுக்

னை தடவைகளானாலும் வெளிமா

ளுக்குச் செல்ல முடியும். எனினும்

மாவட்டங்களில் தங்கும் முகவரியில்

ஏற்படும் பட்சத்தில் புதிய பாதுகாப்பு அனு

பெறவேண்டுமென தெரிவிக் கப்பட்

MATHS CENTER
M.M.V.ROAD - NELLIADY
3-ம் தவணைக்கான வகுப்புக்க
தரம் 6,7, 8, 9, 10, 11
ஆரம்பம்:-01.08.2008 வெள்ளி 3.30 P
(C-

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்